THE HINDU

2 - APR 2024

# City election office begins distribution of booth slips to voters in 3 LS constituencies



Corporation Commissioner J. Radhakrishnan at the launch of the distribution of booth slips to voters in the city. S.R. RAGHUNATHAN

**The Hindu Bureau**
CHENNAI

The Chennai district election office on Monday launched a drive to distribute booth slips to voters in the three Parliamentary constituencies of the city.

Speaking to mediapersons, Chennai district election officer J. Radhakrishnan said that 4,083 workers would distribute booth slips to 3.25 lakh electors every day up until April 13, for the upcoming Lok Sabha poll.

The booth slips will have details about the location of the booth and the section where the electors' name has been included. As on March 17, the district has reported 39.25 lakh electors on its rolls, including 19.28 lakh men, 19.95 lakh women and 1,199 others.

Pointing to the measures taken to build confidence among voters vulnerable to intimidation, Mr. Radhakrishnan said the list of vulnerable and critical polling stations will be finalised this week.

The Chennai district election office will guide residents and traders to follow the model code of conduct ahead of Lok Sabha election, he said. On the seizure of cash, he said a committee of officials will verify documents to ensure they are valid in order to return the cash.

THE HINDU

2 - APR 2024

# 95,000 advertisements removed

**The Hindu Bureau**
CHENNAI

To abide by the Model Code of Conduct of the Election Commission of India ahead of the Lok Sabha election 2024, the Greater Chennai Corporation has removed a total of 95,403 unauthorised advertisements.

Yet, a few walls on Anna Salai continued to have poll graffiti, including near the Anand Theatre bus stop, near Thousand Lights Metro Rail Station and at the Government Estate Metro Station subway towards Periyar Statue. The civic body said they will check the complaint.

As of April 1, they have removed 69,125 wall writings in public and private locations, 22,086 posters, 1,220 banners and 2,972 other ads, according to data shared by the civic body.

THE HINDU

2[illegible]-APR 2024

# Officials check church for poll code violation

CHENNAI: Officials of a flying squad inspected Fatima Church in Kodambakkam recently after a complaint of unauthorised gifts distribution at a location close to the shrine was received on cVigil.

The officials of the squad confirmed that no such activities were found during the inspection at the church. Elsiyus Fernando, Fatima Church Parish Council Executive Member, alleged that officers of the Election Commission of India had interrupted the midnight mass for Easter Sunday on March 30, when 2,000 families were involved in prayer.

DECCAN CHRONICLE

12 - APR 2024

# Appeal to parties to include children's manifesto proposals

OP. ARULN | DC
CHENNAI, APRIL 1

As the Lok Sabha poll is fast approaching, the Tamil Nadu Child Rights Watch and other child welfare organisations have appealed to political parties to spell out measures to protect child rights and their well-being in the manifestos.

They have crafted a comprehensive children's manifesto and the document, aimed at advocating the welfare and rights of children, has been presented to political parties, urging them to integrate these proposals in their election manifestos.

The children's manifesto emerges as a critical blueprint for shaping the future of India's youth, emphasising the need for legislative and programmatic actions to safeguard their rights and well-being.

Reflecting the constitutional mandate and the global commitment under the UN Convention on the Rights of the Child, which India ratified in 1992, the manifesto advocates for holistic policies to ensure children's access to essential services and their best interests.Key areas of focus include ensuring quality education for every child, with an emphasis on inclusive pre-primary and skill development programs, especially for the underprivileged.

The document also calls for a robust enhancement of child protection laws, proposing the expansion of the Child Abuse Act to address the pressing issues of child labour, trafficking and abuse. The establishment of special courts and support systems is advocated to provide swift justice and rehabilitation for victims.

Beyond protection and education, the manifesto champions the active participation of children in decision-making processes, suggesting their involvement in school governance and community activities.

It also highlights the need for environmental awareness and action among children, aligning with global concerns on climate change.

A notable demand in the manifesto is the allocation of at least 6 percent of India's GDP towards child development, asserting the need for substantial investment in the nation's future.

The call for transparency and accountability is evident in the proposed annual Child Budget reports, aimed at monitoring and ensuring the effective use of allocated funds.

The manifesto also proposes the establishment of dedicated departments and committees for women and child development.

DECCAN CHRONICLE

12 - APR 2024

# 68 registered, recognised political parties in the fray

G BABU JAYAKUMAR & D SEKAR /DC
CHENNAI, APR 1

For the April 19 elections to the Lok Sabha from Tamil Nadu, 68 registered or recognised political parties are in the fray, fielding 241 candidates between them, with some of the parties having unfamiliar names like the Viro Ke Vir Indian Party that has six candidates contesting the polls.

The two parties that have candidates contesting from all the 39 constituencies in the State are the Naam Tamilar Katchi (NTK), led by Seeman, and the Bahujan Samaj Party (BSP), founded by the late Kanshi Ram and now headed by Mayawati and based in Delhi.

Of the total 950 candidates left in the electoral race after scrutiny and withdrawal of nominations, 609 are independents and the rest are affiliated to parties, some of whom go by strange nomenclatures like 'Viduthalai Kalam Katchi', Tipu Sultan Party, Punnagai Desam Party, Jebamani Janata, Anti-Corruption Dynamic Party, Veerth Thiyagi Viswanathadoss Thozhilalar Katchi, Vidiyalai Thedum Indiar Party and Ahimsa Socialist Party.

Then there are some parties with names that most people in the State might not understand at all, leave alone vote for them. Some of those parties are Rashtriya Samaj Paksha, Hardam Manavtawadi Rashtriya Dal, Ganasangam Party of India and Thakkam Katchi.

Popular parties with their names, and also symbols, familiar to the common people are DMK contesting in 22 seats, AIADMK 34 seats, Congress 9 seats, BJP 23 seats and PMK 10 seats. Smaller parties in the State that have fielded candidates as allies of one of the three major coalitions led by the DMK, AIADMK and BJP are TMC 3 seats, VCK 2 seats and DMDK five.

Both the national communist parties the CPI and CPM have fielded two candidates each contesting as part of the DMK-led alliance, while another party called SUCI (Communist) is also fighting the electoral battle from two constituencies.

While Amma Makkal Munnetra Kazhagam (AMMK) of T T V Dinakaran, contesting in two seats as a BJP ally, is a party bearing the name of a past leader, there are several not so popular parties named after popular leaders.

They are: Ambedkarite Party of India (2 seats), Anna Makkal Katchi (1 seat), Anna MGR Dravidian Makkal Katchi (5 seats), Anna Puratchi Thalaivar Amma Dravida Munnnetra Kazhagam (2 seats) and Mahatma Makkal Munnetra Kazhagam (2 seats).

DECCAN CHRONICLE
2 - APR 2024

# Poll monitoring squads bolstered in Nilgiris

B. RAVICHANDRAN I DC
OOTY, APRIL 1

Nilgiris collector M.Aruna, also the returning officer for the Nilgiris (SC) parliamentary constituency, has stated that the district administration has deployed nine flying squads (FST), nine static surveillance teams(SST), and one video surveillance team(VST), each for the Ooty, Gudalur and Coonoor assembly segments comprising the parliamentary constituency.

As per the instructions of election expenditure observer D. Kiran, the FST, SST and VST in the aforementioned assembly segments have been increased to intensify the monitoring of the expenditure of all candidates. In addition to the existing squads, three FSTs and one VST have been added to all the three assembly segments in the Nilgiris and three SST have been added to Gudalur assembly segment, thereby increasing the total strength of the election expenditure monitoring teams to 72. The teams will be on round the clock duty, she added.

THE NEW INDIAN EXPRESS
12 - APR 2024

# No MP has set foot in our village, but we will vote, say Puliyansalai tribals

DEBJANI DUTTA @ Puducherry

AT the heart of Perumalpuram, within the folds of Villianur commune, lies Puliyansalai, a tribal hamlet struggling under the tall shadows cast by systemic neglect and poverty. The village houses 18 families of the Malakkuravan tribe whose poor living conditions have been further exacerbated by the looming threat of eviction. However, despite their marginalised status and irrecognition as a Scheduled Tribe (ST), the members of the tribe are determined to exercise their fundamental right this Lok Sabha election.

"We are a small community, often overlooked, but we will cast our votes," asserted M Egambaram, president of the tribal association, reflecting the high hopes of the community in participating in the electoral process. Even though no MP or even a candidate has set foot in their village, the tribals are clear in what they want for themselves: an MP who will champion their cause of recognition as an ST, utilising the Members of Parliament Local Area Development (MPLAD) funds to bring essential amenities to the village, securing pattas and financial support for higher education.



For over three decades, the residents of Puliyansalai have lived in makeshift shelters on land belonging to the Puducherry Housing Board | SRIRAM R

Securing patta land is perhaps the most important of their demands, as the tribal families of Puliyansalai have, for over three decades, lived in nothing but makeshift shelters on land belonging to the Puducherry Housing Board (PHB). Every rainy season brings with it the threat of flooding and collapse of the makeshift shelters, they lamented. "Even basic facilities such as toilets are nonexistent in our homes, forcing us to use the nearest toilet which is some 500 metres away. Drinking water comes from a common tap, which also gets submerged during rains," said E Alamelu (47), a resident.

While the hamlet did get an electricity connection in 2017, facilitated by the then L-G Kiran Bedi, the livelihoods of the tribals and their educational prospects still remain doubtful. Most families survive by selling vegetables, handicraft items on the roadside or driving autorickshaws on a rental basis. The residents also mentioned the persistent difficulties faced by the youngsters in funding their higher education.

"Unlike the Adi Dravidars, we do not receive any higher educational assistance. We are recognised as a Backward Tribe by the Puducherry government, which entitles us to reservation in basic education. But then, what about college education," asked E Suganya (30). "A student studying physiotherapy at a private college also sells vegetables and does odd jobs to support his education and travel expenses," she added.

Accessing special loan schemes to start small businesses has also proved challenging. "Banks ask us for collateral, despite Prime Minister's Mudra loan requiring no such security," said Egambaram.

Amid such a situation, Puliyansalai residents recently received an eviction notice from PHB, stating that the land has been handed over to Padmini Nagar residents for the construction of an overhead water tank, a park and other facilities. The tribal residents refused to vacate unless an alternative plot is provided to them. While there has been a delay in finding alternative land, Padmini Nagar residents' association has moved the High Court seeking their eviction.

It remains to be seen if the upcoming polls usher in the wave of change Puliyansalai residents seek, but either way their journey towards empowerment is far from over.

THE NEW INDIAN EXPRESS

12 - APR 2024

# Tiruppur BJP candidate booked for MCC violation

EXPRESS NEWS SERVICE @Erode

THE district police have registered a case against BJP's Tiruppur candidate AP Muruganandam for opening an election office without permission in Anthiyur, which comes under the Tiruppur Lok Sabha constituency.

According to sources, flying squad officials received information that a temporary election office has been opened for Muruganandam, without permission, in the premises of a private rice mill in Anthiyur. Subsequently, a team conducted an investigation and found out that permission was not obtained to open the office.

E Boobalan, in-charge officer of the flying squad team, lodged a complaint at Anthiyur Police Station and a case was registered against Muruganandam and Anthiyur BJP functionary Deivasikamani.

Deivasikamani had applied for permission to open the office, but the assistant returning officer gave permission to open it on April 1. But BJP functionaries opened it early, sources said.

THE NEW INDIAN EXPRESS
2 - APR 2024

# Notice on full VVPAT slip count

SUCHITRA KALYAN MOHANTY @ New Delhi

THE Supreme Court on Monday issued notices to the Centre and the Election Commission of India on a plea seeking a complete count of Voter Verifiable Paper Audit Trail (VVPAT) slips in polls as opposed to the current practice of verification of only five randomly selected EVMs through VVPAT paper slips. The petition filed by activist Arun Kumar Agrawal challenged the EC's guideline that mandates that VVPAT verification be done sequentially, causing undue delay. The plea contended that if simultaneous verification is done, then complete VVPAT verification can be done in a matter of 5-6 hours. VVPAT is an independent vote verification system which permits an elector to see whether his vote was cast correctly. The VVPAT generates a paper slip, which can be viewed by the voter. The paper slip is kept in a sealed cover and can be opened in case of a dispute.

THE NEW INDIAN EXPRESS
12 - APR 2024

# Melpathi's Dalit residents demand separate booth for LS polls

KRITHIKA SRINIVASAN
@Villupuram



The unused village service centre located in the Dalit side of Melpathi | EXPRESS

MORE than 450 voters living in the Dalit residential area of Melpathi village have demanded a separate polling booth for fear of entering the caste Hindu locality to reach the existing booth. In April 2023, a number Dalit residents were physically assaulted and verbally abused for entering the village's Draupadi Amman Temple.

In a petition to the collector on Friday, the Dalits said, "We fear the caste Hindus and their tactics of pulling us into conflict at every chance they get. The polling booth for Melpathi is located in the caste Hindu area and we do not feel safe going there on the polling day. Hence, we demand a separate booth for us to vote."

Speaking to *TNIE*, 34-year-old Karthik (name changed), a Dalit resident, said, "It is not out of fear that we seek a separate booth, but for safeguarding our self-respect and dignity. A year ago, our relatives were chased and attacked by caste Hindus for entering the temple, after which we had to cut ties with them. They also have stopped employing us as agricultural workers. None of them have been arrested for their violence and blatant caste discrimination to this day." He further added that the government's inaction and police apathy in handling the incident have led the Dalits of Melpathi to distrust the security provided by the governing bodies on polling day. "Elections cannot become one more reason for us to go through the same pain again," he asserted.

One of the petitioners, a 60-year-old Dalit resident, told *TNIE*, "If setting up a whole new booth is not possible, at least let us cast our votes at the collectorate. We all will spend our own money to travel there on polling day. There is no way we will go into the oor (caste Hindu area) where we have been utterly humiliated for merely entering a temple." He added that their proposal has also been conveyed to the DRO who met them on Friday.

Melpathi Dalits have proposed for a separate booth at the empty village service centre building located in their side of Melpathi. However, official sources stated that a booth can be allocated only if the voter count is above 1,500.

In response to the issue, Collector Palani told *TNIE*, "We have marked the Melpathi booth as a critical/vulnerable booth. There will be special protection by CRPF personnel, live webcam casting, state police force and micro observers will be deployed to ensure the Dalits can cast their votes in peace and no mishap occurs. Moreover, we have also warned the caste Hindu residents of severe police action if they pick a quarrel with the Dalits on election day."

THE NEW INDIAN EXPRESS
12 - APR 2024

# ECI urged to stop screening of MK biopic at memorial

EXPRESS NEWS SERVICE
@ Chennai

THE AIADMK on Monday urged the Election Commission of India to stop the screening of a biopic on former chief minister M Karunanidhi at his memorial. Currently, the veteran leader's life history is being screened six times every day.

Addressing reporters at the secretariat on Monday, Chief Electoral Officer Satyabrata Sahoo said the panel has received a complaint in this regard from the AIADMK. "We have sought an explanation from DIPR officials about the screening and have ordered immediate action," he added.



Sahoo also informed the press that state-level election expenditure observer Bala Krishnan arrived in Tamil Nadu on Monday and that the latter will monitor the election expenses across the state. He is scheduled to convene discussions with various enforcement agencies on Tuesday.

Providing details about the ECI's next course of action, Sahoo said the Chief Election Commissioner of India is scheduled to hold a meeting with the state CEOs, Chief Secretaries and DGPs on Wednesday. Sahoo too, will conduct a meeting with district election officers through video-conference. Speaking about the seizure by the election flying squads, Sahoo said that a total of ₹109.76 crore in cash and goods have been seized so far, and of the 1,822 complaints received through the C-Vigil, as many as 1,803 complaints have been resolved. Meanwhile, the distribution of booth slips to voters commenced on Monday.

THE TIMES OF INDIA
2 - APR 2024

# Tambaram corpn steps up to ensure 100% voter turnout

**Chennai:** Tambaram Corporation officials step up efforts to ensure 100% voter turnout for Lok Sabha elections slated for April 19, said corporation commissioner R Alagumeena on Monday.

Corporation councillors and officers distributed placards on voting protocols to market vendors in Tambaram.

Each department has been instructed to contribute to the election awareness campaign.

"“Our goal is to empower every resident with knowledge of their voting rights and procedures,” Chengalpet collector S Arunraj said as he met with Tambaram residents during a recent election awareness campaign. TNN

DT Next
2 - APR 2024.



District Election Officer and GCC Commissioner J Radhakrishnan distributing booth slips at Egmore on Monday

# GCC to distribute 3 lakh booth slips every day

**CHENNAI: The Greater Chennai Corporation (GCC) on Monday has started distributing voter slips in 16 Assembly constituencies ahead of the Lok Sabha elections. Corporation Commissioner J Radhakrishnan said that at least three lakh slips will be distributed by the zonal level officials every day.**

"As on March 17, there are 39.25 lakh voters in Chennai district of which 19.28 lakh male, 19.95 female and 1,199 third gender voters. We have started to distribute booth slips to the eligible voters in three constituencies. The officials are instructed to distribute three lakh slips to the public. Also, if the public has any queries regarding voting and others they can ask the officials," said Radhakrishnan while distributing voter slips at Egmore constituency on Monday.

The District Election Officer stated that the voter slips will be distributed till April 14. The Greater Chennai Corporation has distributed three ballot boxes to north and south constituencies each and two boxes for Central Chennai constituency. As additional ballot boxes are required to the three constituencies, steps have been taken accordingly to provide in the next few days.

So far, the flying squads and static surveillance team has seized Rs 9.13 crore worth cash, gold and other things of which Rs 3.35 crore is in cash and Rs 5.55 crore worth gold. In addition, the staff drafted for election duty will be allocated from Tuesday.

DT Next

2 - APR 2024

# Erode dist sees 58 poll violation cases in a day

**CHENNAI:** The Election Commission has constituted one more flying squad for Erode district after 58 poll code violations were reported in a single day, from Saturday 7 am to Sunday 7 am. Owing to the rise in violations, EC has increased the number of flying squads to 25 in the district. The additional squad is allotted for poll violation checks in the limits of Erode East Assembly constituency. Poll officials said that they received 39 complaints through the toll-free number set up for the purposes, while 19 were received on E-Vigil app. All the complaints were acted upon, EC officials said.

இந்து தமிழ் திசை

12 - APR 2024

சி-விஜில் செயலியில் புகார் அளிப்பவர் விவரம் ரகசியம் காக்கப்படும்

# தமிழகத்தில் வீடு வீடாக 'பூத் சிலிப்' விநியோகம் தொடங்கியது

▶ தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தகவல்

● சென்னை

தமிழகத்தில் அனைத்து வாக்காளர்களுக்கும் வீடு வீடாக 'பூத் சிலிப்' வழங்கும் பணி தொடங்கியுள்ளது. தேர்தல் விதிமீறல்கள் குறித்து சி-விஜில் செயலியில் புகார் கொடுக்கும் பொதுமக்களின் விவரங்கள் ரகசியம் காக்கப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்தார்

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள 6.23 கோடி வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு (பூத் சிலிப்) வழங்கும் பணி தொடங்கியுள்ளது. வாக்காளர் வழிகாட்டி கையேடும் வீடு வீடாக வழங்கப்பட உள்ளது.

## செலவின பார்வையாளர் நியமனம்

தமிழகத்துக்கான மாநில அளவிலான செலவின பார்வையாளராக கேரளாவை சேர்ந்த முன்னாள் ஐஆர்எஸ் அதிகாரி பி.ஆர்.பாலகிருஷ்ணனை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. தமிழகத்தின் 39 தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்ட 58 செலவின பார்வையாளர்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதுடன், அனைத்து அமலாக்க துறைகளின் பணிகளையும் அவர் ஒருங்கிணைப்பார். தொகுதிவாரியாக சென்று ஆய்வு நடத்துவார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் வருமான வரித் துறை, அமலாக்கத் துறை, சுங்கத் துறை, கலால் வரித் துறை, மாநில ஆயத்தீர்வை துறை என பல்வேறு முகமைகளின் அதிகாரிகளுடன் 2 அமர்வாக அவர் ஏப்ரல் 2-ம் தேதி (இன்று) ஆலோசனை நடத்துகிறார்.

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் 3-ம் தேதி (நாளை) மாலை 3 மணி அளவில் காணொலி வாயிலாக, அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகள், தலைமைச் செயலர்கள், டிஜிபிக்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

மறுநாள் (ஏப்.4) விளவங்கோடு இடைத் தேர்தல், மக்களவை தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரி



கள், எஸ்.பி.க்களுடன் காணொலியில் ஆலோசனை நடத்த உள்ளேன். இதில் மாநில தேர்தல் செலவின பார்வையாளரும் பங்கேற்பார்.

தமிழகத்தில் 21,229 பேரிடம் உரிமம் பெற்ற துப்பாக்கிகள் உள்ளன. அவற்றில் இன்னும் 71 துப்பாக்கிகள் மட்டும் ஒப்படைக்கப்படவில்லை.

ராமநாதபுரம் தொகுதிக்கு உட்பட்ட அறந்தாங்கியில் ஆரத்தி எடுத்த பெண்ணுக்கு முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் பணம் கொடுத்ததாக வந்த புகார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பிற கட்சி தலைவர்கள் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது பற்றியும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதுபோன்ற நிகழ்வுகளில் நடவடிக்கை எடுப்பதற்கு, சி-விஜில் செயலி மூலம் பெறப்படும் வீடியோ ஆதாரங்கள் உதவியாக உள்ளன. சாதாரணமாக செல்போனில் எடுத்து அனுப்பும் வீடியோக்களை, முந்தைய நிகழ்வுகள் என்று கூறி மறுத்துவிட வாய்ப்பு உள்ளது. அவற்றின் நம்பகத்தன்மையை ஆய்வு செய்ய அவகாசம் தேவைப்படும்.

எனவே, நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக சி-விஜில் மூலம் பொதுமக்கள் புகார் அளித்தால் 100 நிமிடங்களுக்குள் அதன்மீது நடவடிக்கை எடுக்க முடியும். புகார் அளிப்பவர்களின் விவரம் ரகசியம் காக்கப்படும் என்பதால், அச்சப்பட வேண்டாம். இந்த செயலி மூலம் இதுவரை 1,822 புகார்கள் பெறப்பட்டு, 1,803 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது, 19 புகார்கள் விசாரணையில் உள்ளது.

நடத்தை விதிகள் அமலில் இருக்கும் வரை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதி நினைவிட அருங்காட்சியகத்தை மூட வேண்டும் என்ற புகார் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க செய்தி துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் பணிக்காக ஏற்கெனவே 25 கம்பெனி துணை ராணுவ படையினர் வந்துள்ளனர். மேலும் 165 கம்பெனி துணை ராணுவ படையினர் ஓரிரு நாளில் தமிழகம் வருவார்கள்.

தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் உயிரிழந்தால் ரூ.15 லட்சம், பெரிய அளவிலான காயத்துக்கு ரூ.7.50 லட்சம், லேசான காயத்துக்கு, ரூ.40 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படுகிறது. பயங்கரவாத தாக்குதல் போன்ற நிகழ்வுகளில் இந்த நிவாரண தொகை 2 மடங்காக வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## களத்தில் 950 வேட்பாளர்கள்

தமிழகத்தில் உள்ள 39 மக்களவை தொகுதிகளிலும் 609 சுயேச்சை வேட்பாளர்கள் உட்பட மொத்தம் 950 பேர் போட்டியிடுகின்றனர். இதில் ஆளும் திமுக சார்பில் 23, அதிமுக 34, பாஜக 23, காங்கிரஸ் 9 மற்றும் பகுஜன் சமாஜ், நாம் தமிழர் கட்சி சார்பில் தலா 39, பாமக சார்பில் 10 பேர், நாடாளும் மக்கள் கட்சி சார்பில் 12 பேர் களத்தில் உள்ளனர்.

## ரூ.109 கோடி பறிமுதல்

தமிழகத்தில் கடந்த மார்ச் 16-ம் தேதி முதல் மார்ச் 31-ம் தேதி காலை வரை, தேர்தல் நடத்தை விதிகளை மீறி எடுத்துச் செல்லப்பட்ட ரூ.48.61 கோடி ரொக்கம், ரூ.3.06 கோடி மதுபானம், ரூ.67 லட்சம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள், ரூ.47.53 கோடி தங்கம், வெள்ளி உள்ளிட்ட விலை உயர்ந்த உலோகங்கள், ரூ.9.88 கோடி பரிசுப் பொருட்கள் என ரூ.109.76 கோடி மதிப்பில் பணம், பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுதவிர, வருமான வரித் துறை சார்பில் ரூ.2.74 கோடி பறிமுதல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, சென்னை மாவட்டத்தில் உள்ள 3 மக்களவை தொகுதிகளில் பூத் சிலிப் விநியோகத்தை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன் நேற்று தொடங்கிவைத்தார். ஒரு நாளுக்கு 3.25 லட்சம் பேருக்கு பூத் சிலிப் வழங்கப்படும். இப்பணியில் 3,800 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பணிகள் 13-ம் தேதிக்குள் முடிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

CEO, TN. Informs that the distribution of booth slips to voters in the 3 P.C. along with all districts.

இந்து தமிழ் திசை

2 - APR 2024

# தேர்தல் பணியில் ஈடுபட விரும்பும் முன்னாள் படைவீரர்கள் பதிவு செய்யலாம்

● சென்னை

சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மக்களவை தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் முன்னாள் படைவீரர்களை சிறப்புக் காவலர்களாக ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 65 வயதுக்கு உட்பட்ட உடல் ஆரோக்கியமுள்ள அனைத்து முன்னாள் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவி வகித்த முன்னாள் படை வீரர்கள் உடனடியாக சைதாப்பேட்டையில் உள்ள சென்னை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். அங்கு உரிய படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து, தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படுவோருக்கு மதிப்பூதியம் வழங்கப்படும். மேலும், இது தொடர்பாக கூடுதல் விவரங்களுக்கு 044-2235 0780 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

Greater Chennai Corporation informs that Ex Serviceman can apply for election duty by Chennai Corporation's press release.

இந்து தமிழ் திசை

2 - APR 2024

# தி.நகர் தொகுதியில் நீக்கப்பட்ட வாக்காளர் 528 பேரை பட்டியலில் சேர்க்க அதிமுக மனு

● சென்னை

தி.நகர் தொகுதியில் நீக்கப்பட்ட வாக்காளர்கள் 528 பேரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அதிமுக கோரியுள்ளது.

தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாஹூவை சந்தித்த அதிமுக செய்தி தொடர்பாளர் பாபு முருகவேல் புகார் ஒன்றை அளித்தார். அதில் கூறியிருப்பதாவது:

தேர்தலை முன்னிட்டு தி.நகர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் நிகழ்வு கடந்த டிச.20,21 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அப்போது அப்பகுதியில் 528 வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. நீக்கப்பட்டவர்கள் அதே பகுதியில் தான் வசித்து வருகின்றனர். அவர்களை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். அல்லது உரிய வாக்குச்சீட்டு, வாக்கு பதிவதற்கான அடையாள அட்டைகள், வைத்திருக்கிற போது அவர்களுக்கு வாக்களிக்கிற தகுதியை வழங்க வேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

ADMK party petition CEO, TN. to add 528 eliminat votors in T. Nagar constituency.

இந்து தமிழ் திசை

12 - APR 2024

## சென்னையில் வீடு வீடாக

# வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம் தொடக்கம்

## ● ஏப்ரல் 13-ம் தேதிக்குள் முடிக்க திட்டம்

● சென்னை

சென்னையில் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம் நேற்று தொடங்கியது. மாவட்டம் முழுவதும் 13-ம் தேதிக்குள் விநியோகத்தை முடிக்க திட்டமிட்டிருப்பதாக மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை மாவட்டத்தில் உள்ள 3 மக்களவை தொகுதிகளில், மாவட்ட கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டும் 39 லட்சத்து 25 ஆயிரத்து 122 வாக்காளர்கள் உள்ளனர். இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களில் தேர்தலுக்கு முன்பாக வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்குச் சாவடி சீட்டு வழங்கப்படும்.

அதில் வாக்காளர் விவரம் மற்றும் பட்டியலில் எந்த வரிசை எண்ணில் அவரது பெயர் உள்ளது. வாக்குச்சாவடி எண் ஆகியவை இடம்பெறும். இதை மட்டுமே காண்பித்து, வேறு ஆவணங்களை காண்பிக்காமல் வாக்களிக்கலாம். இந்த முறை வாக்குச்சாவடி சீட்டுக்கு பதிலாக, வாக்காளர்களின் புகைப்படம் இன்றி, மற்ற விவரங்கள் இடம்பெற்ற வாக்காளர் தகவல் சீட்டை வழங்குவது என தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது.

அதன்படி சென்னை மாவட்டத்தில் வீடு வீடாக வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம் தொடக்க நிகழ்ச்சி, வேப்பேரியில் நேற்று நடைபெற்றது. இதில் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன் பங்கேற்று, வீடு வீடாக வாக்காளர் தகவல் சீட்டுகளை வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னையில் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம் தொடங்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு தகவல் சீட்டை வழங்க திட்டமிட்டிருக்கிறோம். ஒவ்வொரு வீட்டுக்கும் வாக்காளர் கையேடும் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணியை வரும் 13-ம் தேதிக்குள் முடிக்க இருக்கிறோம். இப்பணியில் 364 கண்காணிப்பாளர்கள், 3 ஆயிரத்து 519 களப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சென்னையில் 938 அமைவிடங்களில் 3 ஆயிரத்து 726 வாக்குச் சாவடிகள் அமைய உள்ளன. இதில் பதற்றமானதாக 579 வாக்குச் சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் 18 வாக்குச் சாவடிகளை அடையாளம் கண்டு வருகிறோம். தேர்தல் பார்வையாளர்களுடன் கலந்தாலோசித்து இறுதி செய்யப்படும். அங்கு நுண் பார்வையாளர்கள், கூடுதல் துணைராணுவப்படையினர் நியமிக்கப்படுவார்கள். வாக்குச் சாவடி அலுவலர்கள் 20 ஆயிரம் பேருக்கு முதற்கட்ட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 1500 பேர் பயிற்சிக்கு வராமல் இருந்தனர். அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) சுரேஷ் உடனிருந்தார்.



↑ மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு வீடுவீடாகச் சென்று பூத் சிலிப் வழங்கும் பணியை சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன் வேப்பேரியில் நேற்று தொடங்கி வைத்து பார்வையிட்டார். படம்: எஸ்.சத்தியசீலன்

Door to door distribution of booth slips to voters by DEO

இந்து தமிழ் திசை

2 - APR 2024

# திருவள்ளூர் மக்களவை தொகுதி தேர்தல் கீதம்

## மாவட்ட தேர்தல் அலுவலர், பொது பார்வையாளர் வெளியிட்டனர்

● திருவள்ளூர்

திருவள்ளூர் மக்களவை தொகுதிக்கான தேர்தல் கீதத்தை நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர் பிரபுசங்கர், தேர்தல் பொது பார்வையாளர் அபு இம்ரான் வெளியிட்டனர்.

திருவள்ளூர் (தனி) மக்களவை தொகுதியில் நூறு சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, மாவட்ட தேர்தல் அலுவலகம், பல்வேறு நிகழ்வுகள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், திருவள்ளூர் மக்களவை தொகுதிக்கான தேர்தல் கீதம், திரைப்பட பாடலாசிரியர் யுக பாரதியின் பாடல் வரிகளில், சத்யாவின் இசையில், சரவணக்குமாரின் இயக்கத்தில், திரைப்பட பின்னணிப் பாடகர் மனோவின் குரலில் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவள்ளூர் மக்களவை தொகுதிக்கான தேர்தல் தூதுவராக திரைப்பட பின்னணி பாடகர் மனோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், திருவள்ளூர் மக்களவை தொகுதிக்கான தேர்தல் கீதம் வெளியீட்டு விழா, தேர்தல் தூதுவர் அறிமுக விழா நேற்று திருவள்ளூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றன.

இதில், மாவட்ட தேர்தல் அலுவலர் பிரபுசங்கர், திருவள்ளூர் மக்களவை தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் அபு இம்ரான் தேர்தல் கீதத்தை வெளியிட்டனர். அதனை, திரைப்பட பின்னணி பாடகர் மனோ பெற்றுக் கொண்டார். தொடர்ந்து, தேர்தல் தூதுவர் மனோ அறிமுகம் செய்யப்பட்டார்.

விழாவில், மாவட்ட தேர்தல் அலுவலர் பிரபுசங்கர் பேசியது:

திருவள்ளூர் மக்களவை தொகுதிக்காக தேர்தல் கீதம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தல் கீதம் திருவள்ளூர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ஒலிக்க போகிறது. இந்த தேர்தல் கீதம், திருவள்ளூர் மக்களவை தொகுதி பொதுமக்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான புது முயற்சி.

https://drive.google.com/file/d/1ms7i3_bGl29cYbslpO4qLqADxd6fkhUv/view?usp=sharing இணையதளத்தின் மூலம் பொது மக்கள் தேர்தல் கீதத்தை பதிவேற்றம் செய்து, தங்களின் அலைபேசியில் ரிங்டோனாக வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், திரைப்பட இசையமைப்பாளர் சத்யா, இயக்குநர் சரவணக்குமார், திருவள்ளூர் எஸ்.பி. சீனிவாசபெருமாள், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், பயிற்சி ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வதஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



↑ திருவள்ளூர் மக்களவை தொகுதிக்கான தேர்தல் கீதத்தை நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர் பிரபுசங்கர், தேர்தல் பொது பார்வையாளர் அபு இம்ரான் வெளியிட, அதனை பின்னணி பாடகர் மனோ பெற்றுக்கொண்டார்.

Gen. Observer of Tiruvallur released Awareness Song to ensure 100% Voting

இந்து தமிழ் திசை

2 - APR 2024

### வெறுப்பை தூண்டும் வகையில் பேசியதாக

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது தேர்தல் அதிகாரியிடம் அதிமுக புகார்

● சென்னை

கடலூரில் எதிர்க்கட்சிகள் மீது வெறுப்பை தூண்டும் வகையில் அமைச்சர் உதயநிதி பேசியதாகவும் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அதிமுக சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

தலைமை செயலகத்தில், தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாஹூவிடம் புகார் அளித்த பின், அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் இன்பதுரை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடலூர் தேர்தல் பிரச்சாரத்தில், அமைச்சர் உதயநிதி எதிர்க்கட்சிகளை சிறுமைப்படுத்தியும், மிரட்டும் விதமாகவும் பேசியுள்ளார். தேர்தலில் அரசின் சாதனைகளை கூறி வாக்கு கேட்கலாம். அல்லது எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை விமர்சிக்கலாம்.

தேர்தல் ஆணையத்தின் விதிகள் படி உதயநிதி பேசியது தவறு. இதுதவிர தொண்டர்களுக்கு இடையில் வெறுப்பை தூண்டும் விதமாக ஒரு அமைச்சரே கூறினால், அதை எப்படி ஏற்க முடியும். கட்சிகளின் கொள்கைகள், எதிர்க்கட்சிகளின் தவறுகளை சுட்டிக்காட்டலாம்.

ஆனால், அரசியலமைப்பின் பால் உறுதிமொழி எடுத்துக் கொண்ட அமைச்சர் பேசியது தவறு. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரை தேர்தல் பிரச்சாரத்தில் இருந்து விலக்கி வைக்க வேண்டும். அனுமதியளிக்க கூடாது என்றும் தெரிவித்து புகார் அளித்துள்ளோம். நடத்தை விதிகள் வந்த பின் தேர்தல் அதிகாரிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Complaint against Minister Thiru Udhayanidhi by ADMK

தினத்தந்தி
2 - APR 2024

### தமிழகத்திற்கு மாநில செலவின பார்வையாளர் நியமனம்:

# 6.23 கோடி வாக்காளர்களுக்கும் 'பூத் சிலிப்' வழங்கும் பணி தொடக்கம்

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, ஏப்.2-
தமிழகத்தின் 6.23 கோடி வாக்காளர்களுக்கும் 'பூத் சிலிப்' வழங்கும் பணி தொடங்கப்பட்டு உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு சத்யபிரத சாகு நேற்று அளித்த பேட்டி வருமாறு:-

பிற கட்சி தலைவர்களை தரம் தாழ்த்தி பேசுவதை நட்சத்திர பேச்சாளர்கள் தவிர்க்க வேண்டும். ஒரு பிரசார கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

### 'சி-விஜில்' புகார்கள்

தேர்தல் நடத்தை விதி மீறலை படம் எடுப்பவர்கள், இனி 'சி-விஜில்' செயலி மூலம் எடுத்து அதை பதிவேற்றம் செய்யுங்கள். 'சி-விஜிலில்' புகார்களை அனுப்புகிறவர்களின் பெயர் வெளிவராது. பொதுமக்களும், அரசியல் கட்சியினரும் இந்த செயலியை, ஆதாரப்பூர்வமான புகார்களை பதிவு செய்ய பயன்படுத்த வேண்டும். இந்த செயலியை பயன்படுத்தி இதுவரை 1,822 புகார்கள் வந்தன. அதில் 1,803 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. 19 மனுக்கள் விசாரணை மட்டத்தில் உள்ளது.

### 'பூத் சிலிப்' வழங்கும் பணி

சென்னை மெரினாவில் உள்ள கருணாநிதி நினைவிட ஒளி ஒலி காட்சி அரங்கத்தை மூட வலியுறுத்தி அ.தி.மு.க. தரப்பில் புகார் தரப்பட்டுள்ளது. அதில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள செய்தித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் தேர்தல் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே 25 கம்பெனி துணை ராணுவம் வந்துள்ளது. மேலும் 165 கம்பெனி துணை ராணுவ வீரர்களில் ஒரு பகுதி வந்துள்ளனர். அவர்கள் ஓரிரு நாட்களில் வந்துவிடுவார்கள்.

6.23 கோடி வாக்காளர்களுக்கும் 'பூத் சிலிப்' வழங்கும் பணி தொடங்கிவிட்டது. அவை 7-ந் தேதிக்குள் வினியோகிக்கப்படும். வாக்காளர் வழிகாட்டி கையேடு வினியோகமும் ஏற்கனவே தொடங்கி நடந்து வருகிறது. அந்த கையேட்டின் மூலம் வாக்காளர் தங்களின் வாக்குச்சாவடி இருப்பிடத்தை அறிந்துகொள்ளலாம்.

### நிவாரண நிதி

தேர்தல் பணியின்போது இறந்தால் அவர்களுக்கு நிவாரண உதவியாக ரூ.15 லட்சம், பெரிய அளவில் காயம் அடைந்தவர்களுக்கு ரூ.7½ லட்சம், லேசான காயம் அடைந்தவர்களுக்கு ரூ.40 ஆயிரம் வழங்கப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. போக்குவரத்து காவலர் ஒருவர் பணியின்போது இறந்தது தொடர்பாக அவருக்கு நிவாரணம் வழங்க கேட்டு, தலைமை தேர்தல் அதிகாரிக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது. பயங்கரவாத தாக்குதல்களில் இறப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு இறப்பு நிவாரணம் இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

அரசியல் தலைவர்களை வரவேற்று, நாளிதழ்களில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அளிக்கும் விளம்பரங்களுக்கு தேர்தல் கமிஷன் ஒப்புதல் தேவை. ஆனால் தலைவர்களை வரவேற்று தனிநபர்கள், நாளிதழ்களில் தரும் விளம்பரங்களுக்கு தேர்தல் கமிஷன் ஒப்புதல் தேவையில்லை.

### மாநில செலவின பார்வையாளர்

தமிழகத்துக்கென பிரத்யேகமாக மாநில செலவின பார்வையாளராக கேரளாவில் ஓய்வு பெற்ற ஐ.ஆர்.எஸ். அதிகாரி பி.ஆர்.பாலகிருஷ்ணனை, இந்திய தேர்தல் கமிஷன் நியமித்துள்ளது. அவர் சென்னைக்கு வந்து என்னை சந்தித்தார். ஏற்கனவே தமிழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள 58 செலவின பார்வையாளர்களின் செயல்பாடுகள் உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்து அவர் என்னுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

### 3 நாட்கள் கூட்டம்

சென்னை தலைமைச் செயலகத்தில் அமலாக்கத்துறை, ஜி.எஸ்.டி., சுங்கம் மற்றும் கலால் வரித்துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட அமலாக்க முகமைகளின் அதிகாரிகளுடன் இன்று (செவ்வாய்க்கிழமை) ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த கூட்டத்தில் மாநில செலவின பார்வையாளரும் பங்கேற்பார். காலை 11 மணி மற்றும் பிற்பகல் 3 மணி என 2 பிரிவாக இந்த கூட்டம் நடத்தப்படும்.

இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைத்து இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் நாளை (புதன்கிழமை) காணொலி காட்சி மூலம் கூட்டம் நடத்துகிறார். அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள், டி.ஜி.பி.க்கள், தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் தொடர்புடைய அதிகாரிகள் இதில் பங்கேற்பார்கள்.

4-ந் தேதியன்று மாலை 5 மணிக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகளுடன், எனது தலைமையில் காணொலி காட்சி மூலம் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட உள்ளது. இதில் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் விளவங்கோடு இடைத்தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்படும். இதிலும் மாநில செலவின பார்வையாளர் பங்கேற்பார்.

இவ்வாறு அவர் கூறினார்.

CEO, TN. Informs that the distribution of boothslips to Voters ~~in the~~

தினத்தந்தி

2 - APR 2024

செகந்திராபாத் ரெயில் நிலையத்தில்

# சென்னை பயணியிடம் ரூ.37½ லட்சம் பறிமுதல்

ஐதராபாத், ஏப்.2-

தெலுங்கானா மாநிலம் செகந்திராபாத் ரெயில் நிலையத்தில் ரெயில்வே போலீசார் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளநிலையில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகப்படும்படியாக இருந்த பயணியிடம் ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தினர். அவர் முன்னுக்குபின் முரணாக பதிலளித்தநிலையில் சந்தேகம் அடைந்த போலீசார் அவர் கொண்டு வந்த உடைமைகளை சோதனை செய்தனர்.

அதில், அவர் கட்டுகட்டாக பணம் வைத்திருந்தது தெரிய வந்தது. அதை எண்ணிப்பார்த்ததில் மொத்தம் ரூ.37½ லட்சம் இருந்தது. பணம் வைத்திருந்தவரிடம் நடத்திய விசாரணையில் அவர் மதுராந்தகத்தை சேர்ந்த லட்சுமண் ராம் (வயது 45) என்பதும் பணம் குறித்து உரிய விளக்கம் மற்றும் ஆவணம் ஏதும் இல்லாததிருந்ததும் தெரிய வந்தது. இதனையடுத்து தமிழக பயணியிடம் இருந்த ரூ.37½ லட்சம் பணத்தை ரெயில்வே போலீசார் பறிமுதல் செய்து வருமானவரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

37 ½ lakhs were seized at Secunderabad from Chennai passenger.

தினத்தந்தி

12 - APR 2024

# பஸ்சில் பனியன் நிறுவன உரிமையாளரிடம் ரூ.$23\frac{1}{2}$ லட்சம் பறிமுதல்

## தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி

ஈரோடு, ஏப்.2-

அரசு பஸ்சில் பனியன் நிறுவன உரிமையாளர் கொண்டு சென்ற ரூ.$23\frac{1}{2}$ லட்சத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

### ரகசிய தகவல்

சேலத்தில் இருந்து பவானி வழியாக திருப்பூருக்கு அதிக அளவில் பணம் கொண்டு செல்லப்படுவதாக தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளுக்கு நேற்று அதிகாலை ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து பறக்கும் படை அதிகாரிகள் பவானி காலிங்கராயன்பாளையம், லட்சுமி நகர், சித்தோடு அக்ரஹாரம் உள்ளிட்ட பகுதியில் அதிகாலை 5 மணியில் இருந்தே தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தனர்.

### கட்டுக்கட்டாக பணம்

அப்போது, பவானி லட்சுமி நகரில் சேலத்தில் இருந்து திருப்பூர் நோக்கி ஒரு பஸ் சென்றுகொண்டு இருந்தது. தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் அந்த பஸ்சை நிறுத்தி, பயணிகளிடம் சோதனை நடத்தினர். அதில் பயணி ஒருவர் வைத்திருந்த பையில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது. மொத்தம் ரூ.23 லட்சத்து 47 ஆயிரத்து 300 இருந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அதிகாரிகள் அவரை பஸ்சில் இருந்து கீழே இறக்கி விசாரணை நடத்தினர். அதில் அவர் திருப்பூரை சேர்ந்த ரஹ்மத்துல்லா (வயது 71) என்பதும், அவர் திருப்பூரில் பனியன் நிறுவனம் நடத்தி வருவதும், தன்னுடைய நிறுவனத்துக்கு பணத்தை கொண்டு செல்வதாகவும் கூறினார். ஆனால் அதற்கு உரிய ஆவணங்கள் அவரிடம் இல்லை.

இதையடுத்து பறக்கும் படை அதிகாரிகள் பணத்தை பரிமுதல் செய்து, ஈரோடு தாசில்தார் முத்துகிருஷ்ணன் மூலம் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சதீஷ்குமாரிடம் ஒப்படைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட தொகை அதிகம் என்பதால் ஈரோடு வருமான வரித்துறை அதிகாரிகளிடம் பணம் ஒப்படைக்கப்பட்டு, ஈரோட்டில் உள்ள அரசு கருவூலத்தில் பத்திரமாக வைக்கப்பட்டது.

### டாஸ்மாக் ஊழியரிடம்...

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே கொட்டையூர் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் போலீசார் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனை செய்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவரிடம் ரூ.6 லட்சத்து 39 ஆயிரத்து 340 இருந்தது. இது குறித்து அவரிடம் பறக்கும் படையினர் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர், சுவாமிமலை டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர் என்பதும் கடையில் மது விற்பனையில் வசூலான பணத்தை கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் எதுவும் இல்லை என கூறப்படுகிறது. இதையடுத்து ரூ.6 லட்சத்து 39 ஆயிரத்து 340-ஐ பறிமுதல் செய்த அதிகாரிகள் அதை கருவலத்தில் ஒப்படைத்தனர்.

23½ lakhs were seized by flying Squad.

தினத்தந்தி
2 - APR 2024

தமிழகத்தில்

# ரூ.112 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் பறிமுதல்

## தேர்தல் பறக்கும்படை வேட்டை தீவிரம்

சென்னை, ஏப்.2-

நாடாளுமன்ற தேர்தல் தேதி கடந்த மார்ச் 16-ந் தேதி அறிவிக்கப்பட்டது. அதில் இருந்து வாக்காளர்களுக்கு ஓட்டுக்காக பணம், பரிசுப் பொருட்களை கொடுக்கும் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளைத் தடுக்கும் தேர்தல் கமிஷனின் நடவடிக்கைகளும் தொடங்கிவிட்டன.

தேர்தல் நடத்தை விதியின்படி தனி நபர் ஒருவர் தன்னுடன் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் ரொக்கப்பணம் கொண்டு செல்லக்கூடாது. அப்படி யாராவது கொண்டு சென்றால் அதற்கு தகுந்த ஆதாரங்களை, அதாவது அந்தப் பணம் தன்னுடையதுதான் என்பதற்கான ஆதாரங்களை உடன் வைத்திருக்க வேண்டும். வங்கி, ஏ.டி.எம்.-ல் இருந்து எடுத்துச் செல்லும் பணத்திற்கு ஆதாரம் இருக்கலாம்.

ஆனால் வீட்டில் இருந்து, மருத்துவத்திற்கோ, கல்வி கட்டணமாகவோ எடுத்துச் செல்லும் பணத்திற்கு யார் ஆதாரம் தருவார்? என்பது பதில் கிடைக்காத கேள்வியாகவே உள்ளது. இதனால் கடுமையான சிக்கலில் சிக்குபவர்கள் வியாபாரிகள்தான். அதிலும், தங்க நகை வியாபாரிகள் படும்பாடுதான் உச்சம். எனவே இதில் நிலவிய கொந்தளிப்பைக் கண்டு, தேர்தல் கமிஷனுக்கு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கடிதம் எழுதி அறிவுரை கேட்டுள்ளார்.

ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பணத்தை கொண்டு செல்லும்போது இந்த படைகளிடம் சிக்கிக் கொண்டால், பணம் உடனடியாக கிடைப்பது கஷ்டம்தான். ஏனென்றால், ஆதாரம் காட்டப்பட்டாலும் அது முழுமையாக பரிசோதிக்கப்படும். ஒருவேளை சரியான ஆதாரமாக காணப்படவில்லை என்றால், பணம் கைப்பற்றப்பட்டு அந்தந்த இடங்களில் உள்ள கருவூலங்களுக்கு கொண்டு செல்லப்படும். நகை, பொருட்களின் நிலையும் இதுதான்.

ஆனாலும் அதை மீட்க அப்பீல் செய்ய முடியும். இதற்காக கலெக்டர் அலுவலகங்களில் 3 அதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவிடம் ஆதாரங்களைக்காட்டி மேல்முறையீடு செய்யலாம்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 16-ந் தேதியில் இருந்து 31-ந் தேதி வரை ரூ.109.76 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில், ரூ.48.61கோடி ரொக்கப்பணம், ரூ.3.06 கோடி மதிப்புள்ள மது பாட்டில்கள், 0.67 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள், ரூ.47.53 கோடி மதிப்புள்ள தங்கம் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள், ரூ.9.88 கோடி மதிப்புள்ள இலவச பரிசுப் பொருட்கள் அடங்கும். இதுதவிர ரூ.2.74 கோடி பணம் பிடிபட்டு, அது வருமான வரித்துறையின் விசாரணையில் உள்ளது.

112 Crore worth Things were seized in Tamil Nadu

தினத்தந்தி

2 - APR 2024




திருவொற்றியூரில்

# அ.தி.மு.க. சார்பில் அமைத்த மேடை, எல்.இ.டி. திரை அகற்றம்

## அனுமதி பெறாததால் பறக்கும் படை அதிகாரிகள் நடவடிக்கை

திருவொற்றியூர், ஏப்.2-

வடசென்னை நாடாளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ராயபுரம் மனோவுக்கு ஆதரவாக திருவொற்றியூரில் 7-வது வார்டுக்கு உட்பட்ட கிளாஸ் பேக்டரி சாலையில் அ.தி.மு.க. சார்பில் தெருமுனை கூட்டம் நடத்த முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன், 7-வது வார்டு கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். சாதாரண தெருமுனை கூட்டம் என்ற பெயரில் அனுமதி பெற்று, சாலை ஓரத்தில் பிரமாண்ட மேடை, அ.தி.மு.க. சாதனைகளை விளக்கும் குறும்படம் வெளியிடக்கூடிய ராட்சத எல்.இ.டி. திரை, ஒலி பெருக்கி மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் நாற்காலிகளை போட்டு அதில் பொதுமக்களை அமர வைத்திருந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த பறக்கும் படை அதிகாரி சம்பத் தலைமையிலான தேர்தல் அதிகாரிகள், மேடை அமைப்பதற்கோ, எல்.இ.டி. திரை வைப்பதற்கோ அனுமதி இல்லை என்று கூறி அவற்றை அகற்றும்படி கூறினர். மேலும் ஒரே நேரத்தில் ஆயிரம் பேர் கூடுவதற்கும் அனுமதி இல்லை என்றனர்.

இதனால் தேர்தல் அதிகாரிகளுக்கும், அங்கிருந்த கட்சி தொண்டர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. கூடுதலாக அங்கு போலீசார் குவிக்கப்பட்டனர். பின்னர் நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடை, எல்.இ.டி. திரை ஆகியவை அப்புறப்படுத்தப்பட்டது. அதன்பிறகு கூட்டம் நடந்தது. எனினும் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக பறக்கும் படை அதிகாரிகள் சாத்தாங்காடு போலீஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

ADMK's Stage, Tent, led screen were removed by f.s.t due to not getting permission.

தினத்தந்தி
12 - APR 2024



### தேர்தல் பாதுகாப்பு பணிக்காக

# துணை ராணுவத்தினர் சென்னை வருகை

சென்னை, ஏப்.2-

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு பணிக்காக தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடி மையங்களில் மத்திய ஆயுத பாதுகாப்பு படையினர் (துணை ராணுவம்) ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

அந்த வகையில், நேற்று மும்பையிலிருந்து 'எப்' கம்பெனி துணை ராணுவத்தினர் சுமார் 90 பேர் சென்னை சென்டிரல் ரெயில் நிலையம் வந்தனர். அவர்களை தேர்தல் பிரிவு அதிகாரிகள் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள் வரவேற்றனர். இதையடுத்து, துணை ராணுவத்தினர் தங்குவதற்காக திருவள்ளூர் மாவட்டம், கனகவல்லிபுரத்தில் உள்ள போலீஸ் பயிற்சி கல்லூரிக்கு அழைத்து சென்றனர்.

தேர்தலுக்கு முன்னதாக அவர்களுக்கு எந்த நாடாளுமன்ற தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளதோ அங்கு சென்று வாக்குச்சாவடி பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். முன்னதாக நேற்று அதிகாலை 4 மணியளவில் சத்தீஷ்கார் மாநிலம் பிலாஸ்பூரில் இருந்து 91 துணை ராணுவத்தினர் சென்னை சென்டிரல் ரெயில் நிலையம் வந்தனர். அதன்பின், அங்கிருந்து ரெயில் மூலம் மதுரை புறப்பட்டு சென்றனர்.

Arrival of Para military for election at Tamil Nadu.

தினத்தந்தி

2 - APR 2024

# வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள்

## அ.தி.மு.க. புகார்

சென்னை, ஏப்.2-

சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அ.தி.மு.க. வக்கீல் பிரிவு இணைச் செயலாளர் பாபு முருகவேல் அளித்த புகாரில் கூறப்பட்டு இருப்பதாவது:-

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, கடந்த டிசம்பர் 20, 21-ந் தேதிகளில் தியாகராயநகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நடந்து முடிந்தது. அதில் 528 வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்கள் அந்த பகுதிகளில்தான் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். உரிய அடையாள அட்டைகள் வைத்திருக்கிற நிலையில் அவர்களுக்கு வாக்களிக்கிற தகுதியை வழங்க வேண்டும். அதே பகுதியில், தொடர்ந்து ஒரு வாக்குச்சாவடியில் ஓட்டு போட்டுக் கொண்டிருக்கிற வாக்காளர்களின் பெயர்கள், தொலைதூரத்தில் இருக்கிற வாக்குச்சாவடிக்கு மாற்றி திருத்தம் செய்து வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தூரத்தை கருதி அவர்கள் வாக்களிக்க தவறும் பட்சத்தில் அவர்களின் வாக்கு வீணடிக்கப்பட்டு விடும். எனவே இதில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ADMK party petition CEO, TN to add 528 eliminated voters in T.Nagar constituency.

தினமலர்
2 - APR 2024

# சுறுசுறுப்பு!

## ● தினமும் 3.27 லட்சம் பேருக்கு வீடு தேடி 'பூத் சிலிப்'
## ● லோக்சபா தேர்தல் பணியில் 21,000 ஊழியர்கள்

**சென்னை, ஏப். 2–**

**சென்னையில் 'பூத் சிலிப்' வழங்கும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். ஏப்ரல் 13ம் தேதி வரை, தினமும் சராசரியாக 3.27 லட்சம் பூத் சிலிப்கள் வழங்கப்பட உள்ளன.**

சென்னை, வேப்பேரி ரித்தட்சன் சாலையில், சென்னை மாவட்ட வாக்காளர்களுக்கு, பூத் சிலிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணியை, மாநகராட்சி கமிஷனரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ராதாகிருஷ்ணன் வழங்கி, நேற்று துவக்கி வைத்தார்.

அப்பகுதியில், வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் இருந்ததால், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் பேசி, ஓட்டளிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு ராதாகிருஷ்ணன் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



■ லோக்சபா தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு 'பூத் சிலிப்' வழங்கும் பணியை, மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் நேற்று துவக்கி வைத்தார். இடம்: வேப்பேரி.

### வாக்களர் கையேடு

பின், அவர் கூறியதாவது:

சென்னை மாவட்டத்தில், 16 சட்டசபை தொகுதிகளில், 19.28 லட்சம் ஆண், 19.95 லட்சம் பெண், 1,199 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என, 39.25 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி இன்று துவங்கி, 13ம் தேதி வரை நடக்கிறது. தினமும் சராசரியாக 3.27 லட்சம் பூத் சிலிப்கள் வழங்கப்பட உள்ளன.

இந்த பூத் சிலிப்பில், ஓட்டுப்பதிவு மையம் அமைந்துள்ள இடம், வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் காணப்படும் விபரம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. வாக்காளர் தகவல் சீட்டுகளை வழங்கும்போது, ஒரு வீட்டிற்கு தலா ஒன்று என்ற விகிதத்தில் வாக்காளர் கையேடும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பணிகளின்போது, வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கும் தீர்வு காணப்படும்.

சென்னையில், 398 ஓட்டுச்சாவடி மையங்களில், 3,726 ஓட்டுச்சாவடிகள் உள்ளன. இந்த பூத் சிலிப் வழங்கும் பணி 299 மண்டல குழு அலுவலர்கள் வாயிலாக வழங்கப்படுகிறது.

இதற்கென 364 கண்காணிப்பாளர்கள், 3,719 களப்பணியாளர்கள் என, 4,083 பேர் பணியாற்றி வருகின்றனர். தேர்தல் பணிக்கு 19,397 பணியாளர்கள் தேவை என கணக்கிட்டு, 20,016 பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதில், 87 சதவீதம் பேர் முதற்கட்ட பயிற்சியில் பங்கேற்றனர். 1,500 பணியாளர்கள் மட்டுமே பயிற்சிக்கு வரவில்லை. உடல் நலக்குறைவு, பணியிட மாற்றம், குடும்ப நிகழ்ச்சிகள் போன்ற காரணங்களால் பங்கேற்க முடியாத நிலை இருக்கலாம். உரிய விளக்கம் பெறப்பட்டு, அதன்பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னையில், 579 ஓட்டுச்சாவடிகள் பதற்றமானவை. இந்த வார இறுதிக்குள், மேலும் சில ஓட்டுச்சாவடிகள் பதற்றம் நிறைந்தவை என, தேர்தல் பார்வையாளர்களால் அடையாளம் காணப்பட்டு, அப்பட்டியலில் சேர்க்கப்படும்.

### அதிகாரமில்லை

உரிய ஆவணமின்றி எடுத்துச் செல்லப்பட்ட பணத்தின் அளவு 50,000 ரூபாயை உயர்த்துவதா என்பதை தேர்தல் கமிஷன் தான் முடிவு செய்யும். ஆதாரத்தோடு பணத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கோயம்பேடு போன்ற சந்தையில் இருந்து ஒருவர் ஒரு லட்சம் ரூபாய் எடுத்து செல்வதாக இருந்தால், இரண்டு தவணைகளில் தலா 50,000 ரூபாயாக எடுத்து செல்லலாம்.

சென்னையை பொருத்தவரை மனிதாபிமான முறைப்படி, உடல்நலக் குறைவு போன்ற நியாமான காரணங்களுக்காக ஆவணமின்றி பணம் எடுத்து செல்வோர் குறித்து, தேர்தல் பறக்கும் படையினர் உயர் அதிகாரிகளுக்கு உடனடியாக தெரிவித்து, அப்பணத்தை விடுவித்து விடுகின்றனர்.

எங்களுக்கு சில விதிகள் உண்டு. தேர்தல் கமிஷன் விதிகளை மீறி செயல்பட அதிகாரம் இல்லை. திருமணம், மருத்துவம் போன்ற செலவுகளுக்காக பணத்தை விரைந்து வழங்குவதற்காக வருமான வரி துறை, வங்கி, வருவாய் துறை, மாநகராட்சி அதிகாரிகள் இணைந்த கூட்டுக்குழு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.9.14 கோடி பறிமுதல்!

தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு வாயிலாக, நேற்று முன்தினம் வரை, 3.36 லட்சம் ரூபாய், 5.56 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கம், 15 லட்சம் ரூபாய் மதிப்பிலான மொபைல் போன்கள், 7.50 லட்சம் ரூபாய் மதிப்பிலான கணினிகள் உட்பட 9.14 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## வட, தென் சென்னை தொகுதியில் தலா 3 மத்திய சென்னைக்கு 2 ஓட்டு இயந்திரம்

வட சென்னையில் 35 வேட்பாளர்கள், தென்சென்னையில் 41 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எனவே, இந்த இரு தொகுதிகளின் ஓட்டுச்சாவடிகளில் தலா மூன்று ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

மத்திய சென்னையில் 31 வேட்பாளர்கள் என்பதால் அங்கு, இரண்டு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. ஓட்டுச்சாவடிகளில், 20,016 பேர் பணியாற்ற உள்ளனர். அவர்களுக்கு, குலுக்கல் முறையில் ஓட்டுச்சாவடி இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

கூடுதலாக ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் தேவைப்படும் தொகுதிகளில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று கணினி குலுக்கல் முறையில் தேர்வு நடைபெற உள்ளது.

News regarding booth slips distributions.

தினமலர்
2 - APR 2024

# தேர்தல் நடத்தை விதிகளை மீறுவோர் மீது வழக்கு

## போலீசுக்கு ஆணையம் அதிரடி உத்தரவு



**சென்னை, ஏப். 2–**

தமிழகத்தில், லோக்சபா தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. பிரசாரத்தின்போது, வேட்பாளர்களுக்கு ஆரத்தி எடுக்கும் பெண்களுக்கு, வேட்பாளர்கள் பணம் கொடுப்பது; கூட்டத்திற்கு அழைத்து வரப்படும் மக்களுக்கு பணம் கொடுப்பது போன்ற வீடியோக்கள், சமூக வலைதளங்களில் வெளியாகி வருகின்றன.

இவை குறித்து, அரசியல் கட்சிகள் தரப்பில், மாவட்ட தேர்தல் அலுவலர்களிடம் புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதேபோல், பிரசாரத்தின்போது அடுத்த கட்சியினரை அவதுாறாகப் பேசுவது தொடர்பாகவும் புகார்கள் வந்துள்ளன.

அவற்றை விசாரித்து, தவறு செய்தவர்கள் மீது, வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என, தேர்தல் கமிஷன் அறிவுறுத்தி உள்ளது.

இது குறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு கூறுகையில், ''தேர்தல் நடத்தை விதிகளை மீறுவோர் மீது, இந்திய தண்டனை சட்டம் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் போலீஸ் எஸ்.பி.,க்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது,'' என்றார்.

சத்யபிரதா சாஹு மேலும் கூறியதாவது:

தலைமை தேர்தல் கமிஷனர், தேர்தல் தொடர்பாக, நாளை அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரி, தலைமை செயலர், டி.ஜி.பி., மற்றும் முக்கிய அலுவலர்களுடன், தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

நாளை மறுதினம் மாலை 5:00 மணிக்கு, அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் போலீஸ் எஸ்.பி.,க்களுடன், 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

தேர்தல் விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள், 'சி – விஜில்' எனும் மொபைல் போன் செயலி வாயிலாக புகார் செய்ய முன்வர வேண்டும்.

வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் யாரேனும் கொடுத்தால், அது தொடர்பான வீடியோ, புகைப்படத்தை, செயலியில் பதிவேற்றம் செய்யலாம்.

அதே இடத்தில் பதிவேற்றம் செய்யும்போது, அதிகாரிகள் 100 நிமிடத்திற்குள், அங்கு வந்து விசாரித்து நடவடிக்கை எடுப்பர். புகார் அளிப்பவர்கள் குறித்த விபரம் ரகசியம் காக்கப்படும். எனவே, பொதுமக்கள் தைரியமாக புகார் அளிக்க முன்வர வேண்டும்.

இதுவரை, சி – விஜில் வழியாக, 1,822 புகார்கள் வந்துள்ளன. இவற்றில், 19 மட்டும் விசாரிக்கப்பட வேண்டியுள்ளது. மற்றவை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவிடத்தில், ஒலி – ஒளி காட்சி ஒளிபரப்பப்படுவதை நிறுத்த வேண்டும் என, அ.தி.மு.க., சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மீதான நடவடிக்கை குறித்து அறிக்கை அளிக்கும்படி, செய்தித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறினார்.

### ரூ.109.76 கோடி பறிமுதல்

தமிழகத்தில் நேற்று முன்தினம் காலை வரை, 48.61 கோடி ரூபாய் ரொக்கம், 3.06 கோடி ரூபாய் மதிப்புள்ள மதுபானங்கள், 67 லட்சம் ரூபாய் போதைப் பொருட்கள், 47.53 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள், 9.88 கோடி ரூபாய் மதிப்புள்ள இலவசப் பொருட்கள் என, மொத்தம் 109.76 கோடி ரூபாய் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

### 'பூத் சிலிப்' வழங்குவது துவக்கம்

தமிழகத்தில், 3.06 கோடி ஆண்கள்; 3.17 கோடி பெண்கள்; 8,467 மூன்றாம் பாலினத்தவர் என, மொத்தம் 6.23 கோடி வாக்காளர்கள் உள்ளனர். ஏப்., 19 ஓட்டளிக்க வசதியாக, தேர்தல் கமிஷன் சார்பில், அனைத்து வாக்காளர்களுக்கும், 'பூத் சிலிப்' மற்றும் வீட்டுக்கு ஒரு வாக்காளர் கையேடு வழங்கப்படுகிறது.



இப்பணி நேற்று தமிழகம் முழுதும் துவக்கப்பட்டது. ஓட்டுச் சாவடி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, பூத் சிலிப் மற்றும் வாக்காளர் கையேடுகளை வழங்கி வருகின்றனர்.

வாக்காளர் கையேடில், ஓட்டுப்பதிவு செய்யும் முறை, தேர்தல் நடத்தை விதிகளை மீறுவோர் குறித்து புகார் அளிக்க மொபைல் ஆப்ஸ் பயன்படுத்தும் முறை போன்றவை குறித்து விளக்கப்பட்டுள்ளது. மொத்தம் 6.23 கோடி பூத் சிலிப், இரண்டு கோடி வாக்காளர் கையேடு அச்சிடப்பட்டு, வாக்காளர்களுக்கு வினியோகம் செய்யப் படுகிறது.

### ரூ.15 லட்சம் நிவாரணம்

தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள், பணியின்போது இறந்தால், அவர்கள் குடும்பத்துக்கு 15 லட்சம் ரூபாய்; பலத்த காயமடைந்தால், 7.50 லட்சம், லேசான காயமடைந்தால், 40,000 ரூபாய், நிவாரண உதவியாக தேர்தல் கமிஷன் சார்பில் வழங்கப்படும். பயங்கரவாதிகள் தாக்குதலால் பாதிப்பு ஏற்பட்டால், இழப்பீட்டு தொகை இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

### மாநில செலவின பார்வையாளர் நியமனம்

தமிழகத்தில், 39 லோக்சபா தொகுதிகளுக்கும், விளவங்கோடு சட்டசபை தொகுதிக்கும், வரும் 19ம் தேதி ஓட்டுப்பதிவு நடைபெற உள்ளது. வேட்பாளர் செலவுகளை கண்காணிக்க, தொகுதிக்கு இரண்டு செலவின பார்வையாளர்கள், சில தொகுதிகளுக்கு ஒருவர் என, மொத்தம் 58 பேர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் முகாமிட்டு, தேர்தல் பணிகளை செய்து வருகின்றனர். இந்நிலையில், அவர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க, மாநில தேர்தல் செலவின பார்வையாளராக, கேரளாவைச் சேர்ந்த ஐ.ஆர்.எஸ்., அதிகாரி பாலகிருஷ்ணன், தேர்தல் கமிஷனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று, சென்னை தலைமை செயலகத்தில், தொகுதி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள செலவின பார்வையாளர்கள், வருமான வரி, கலால் துறை, வணிக வரித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

E.C instruct police dept to take strict action for on MCC violators.

தினமலர்
2 - APR 2024

# தேர்தல் களத்தில் 68 கட்சிகள்; 341 வேட்பாளர்கள்

**சென்னை, ஏப். 2–** தமிழகத்தில், 68 அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை களம் இறக்கி உள்ளன. 39 லோக்சபா தொகுதிகளில், 874 ஆண்கள், 76 பெண்கள் என, மொத்தம் 950 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதிகபட்சமாக கரூர் தொகுதியில், 54 வேட்பாளர்கள் உள்ளனர். மிகவும் குறைந்தபட்சமாக நாகப்பட்டினம் தொகுதியில், ஒன்பது பேர் களத்தில் உள்ளனர்.

மொத்த வேட்பாளர்கள் 950 பேரில், 609 பேர் சுயேச்சைகள்; மற்றவர்கள், கட்சி வேட்பாளர்கள்.

தேர்தல் கமிஷன் அங்கீகாரம் பெற்ற கட்சிகள், அங்கீகாரம் பெறாத பதிவு செய்யப்பட்ட கட்சிகள் என, மொத்தம் 68 கட்சிகள், 341 வேட்பாளர்களை களம் இறக்கி உள்ளன. பகுஜன் சமாஜ் கட்சி, நாம் தமிழர் கட்சி ஆகியவை, 39 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

அதற்கு அடுத்தபடியாக, அ.தி.மு.க., 34; பா.ஜ., 23; தி.மு.க., 22; நாடாளும் மக்கள் கட்சி 12; பா.ம.க., 10; காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி கட்சி, சாமானிய மக்கள் நல கட்சி, வீரத் தியாகி விஸ்வநாததாஸ் தொழிலாளர்கள் கட்சி ஆகியவை, தலா ஒன்பது தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன.

கன சங்கம் கட்சி ஏழு; பகுஜன் திராவிட கட்சி, தாக்கம் கட்சி, விரோ கீ விர் இந்தியா கட்சி தலா ஆறு; அண்ணா எம்.ஜி.ஆர்., திராவிட மக்கள் கழகம், அறவோர் முன்னேற்ற கழகம், தே.மு.தி.க., ஐக்கிய குடியரசு கட்சி ஆகியவை, தலா ஐந்து தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

68 parties of 341 independent candidates for elections 2024.

தினமலர்

2 - APR 2024

# குடியிருப்பு வளாகங்களில் ஓட்டுச்சாவடி உ.பி., வழியை பின்பற்றுமா தமிழகம்?

– நமது நிருபர் –

நகர்ப்புற பகுதிகளில், ஒரே இடத்தில் 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் இருந்தாலும், அவர்களுக்கு 2 கி.மீ., தொலைவில் தான் ஓட்டுச்சாவடி அமைக்கப்படுகிறது.

தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்கு முன், எந்தெந்த பகுதிகள் ஓட்டுச்சாவடி அமைக்க தேர்வு செய்யப்பட்டதோ, அதே இடங்கள் தான் இப்போதும் தொடர்கின்றன. பெரும்பாலான நகர்கள், ஊர்கள் விரிவாக்கம் ஆன பின்னும், இதில் மாற்றம் வரவில்லை.

தற்போதைய சூழலுக்கு ஏற்ப புதிய இடங்களை தேர்வு செய்வதில், அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் உள்ளனர். இந்த முறை லோக்சபா தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து, மாநில வாரியாக தலைமை தேர்தல் கமிஷன், ஆலோசனை கூட்டங்கள் நடத்தின.

டில்லியில் நடத்த கூட்டத்தில், அதிக மக்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில், ஓட்டுச்சாவடி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை, பல்வேறு கட்சிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

பாதுகாப்பு, இட வசதி போன்ற சாத்தியக்கூறுகள் இருந்தால், அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில், ஓட்டுச்சாவடிகள் அமைப்பதற்கு தடையில்லை என, தேர்தல் கமிஷன் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.



**உத்தர பிரதேசத்தில்...**

தேர்தல் கமிஷன் பச்சைக்கொடி காட்டிய நிலையில், நடப்பு லோக்சபா தேர்தலில், இதை அமல்படுத்த உத்தர பிரதேசம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டிலேயே முதல் முறையாக, அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில் ஓட்டுச்சாவடி அமைக்க, உத்தர பிரதேச மாநிலம் முடிவு செய்துள்ளது.

முதல் கட்டமாக, ஏழு நகரங்களில், 217 அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள், இதற்காக தேர்வு செய்யப்பட்டு உள்ளதாக, அம்மாநில தலைமை தேர்தல் அலுவலர் அறிவித்துள்ளார்.

**தமிழகத்தில்...**

உத்தர பிரதேசத்தில் எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை, தமிழகம் பின்பற்றுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது குறித்து, சென்னை தாம்பரத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சீதாராமன் கூறியதாவது:

சென்னையிலும், புறநகர் பகுதிகளிலும், 1,000த்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ள பல குடியிருப்பு வளாகங்கள் இருக்கின்றன.

இதேபோன்று, அதிக ஓட்டுகள் ஒரே இடத்தில் இருந்தால், அங்கு அவர்களுக்கென தனி ஓட்டுச்சாவடி அமைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும்.

இதனால், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் அதிக சிரமமின்றி, ஆர்வத்துடன் ஓட்டளிக்க வாய்ப்பு ஏற்படும். பெரும்பாலான அடுக்குமாடி குடியிருப்புகளில், சமுதாயக் கூடம் என ஒரு இடம் இருப்பதால், அடிப்படை வசதிகள் ரீதியாக, இதற்கு எவ்வித சிக்கலும் இல்லை.

இப்போது இல்லாவிட்டாலும், எதிர்காலத்திலாவது இதை தேர்தல் கமிஷன் பரிசீலிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

Will T.N follows UP's route like polling Booths at residential appartments.

தினமலர்
2 - APR 2024

# காப்பகங்களில் வசிப்போர் ஓட்டளிக்க வசதி செய்யப்படுமா?

சென்னை, ஏப். 2-
காப்பகங்களில் விடப்பட்டுள்ள முதியோர், மாற்றுத் திறனாளிகள் தங்களின் ஜனநாயக கடமையை ஆற்ற, நேரிலோ அல்லது தபால் வாயிலாகவோ ஓட்டளிக்க, தேர்தல் கமிஷன் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் தலைவர் வில்சன் கூறியதாவது:

தமிழகம் முழுதும், 4,000த்துக்கும் மேற்பட்ட தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான காப்பகங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர்.

இவர்களில் பலர், தங்களின் நிரந்தர வசிப்பிட லோக்சபா தொகுதியில் இருந்து, வெகுதொலைவில் உள்ள காப்பகங்களில் இருக்கின்றனர். மாநிலம் முழுதும் உரிய அங்கீகாரம் இல்லாமல், பல காப்பகங்கள் உள்ளன.

அவற்றில் விடுபட்டுள்ள வாக்காளர்களின் முழுமையான விபரம், மாவட்ட நிர்வாகங்களிடம் இருப்பதாக தெரியவில்லை.

அதேநேரம் காப்பகங்களில் விடப்பட்டுள்ள தகுதியான முதியோர், மாற்றுத்திறனாளிகள் நாட்டின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் அவர்கள் ஓட்டளிக்க ஏற்பாடு செய்யும் பொறுப்பு தேர்தல் கமிஷனுக்கு உள்ளது.

கடந்த, 2019 லோக்சபா தேர்தலின்போது சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மனநல காப்பகத்தில் தங்கியுள்ள நிரந்தர நோயாளிகள், வாக்களிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதேபோல், இந்த தேர்தலிலும், தமிழகம் முழுதும் அங்கீகாரம் பெற்றும், பெறாமலும் உள்ள தனியார் காப்பகங்களில் விடப்பட்டுள்ள முதியோர், மாற்றுத்திறனாளிகள் தங்களின் ஜனநாயக கடமையை ஆற்ற நேரிலோ அல்லது தபால் வாயிலாகவோ ஓட்டளிக்க வைக்க, தேர்தல் கமிஷன் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 2 லட்சம் பேருக்கு என்ன வழி?

மதுரையைச் சேர்ந்த காங்., மாநில பொதுக்குழு உறுப்பினர் செய்யது பாபு தேர்தல் கமிஷனை வலியுறுத்தி, மதுரை மாவட்ட தேர்தல் அதிகாரி சங்கீதாவிடம் மனு கொடுத்துள்ளார்.

கடிதத்தில், ''மதுரை மாவட்டத்தில் அரசு, தனியார் மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறுவோர், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் என இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் உள்ளனர். இவர்களுக்கும் தபால் ஓட்டுரிமை வழங்க வேண்டும்'' என கேட்டுக் கொண்டுள்ளார். கலெக்டர் மூலம் வந்த கடிதத்தை, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ, இந்திய தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

Article - will residents of Kalpakkam get voting facilities

தினமணி
2 - APR 2024

# வேட்பாளர்களின் செலவினத்தை கண்காணிக்க மாநில பார்வையாளர் நியமனம்

## தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு

சென்னை, ஏப். 1: வேட்பாளர்களின் செலவினங்களை கண்காணிக்க மாநில அளவில் பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் அவர் திங்கள்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் நடைபெற்று வரும் நிலையில், வேட்பாளர்களின் செலவுகளை கண்காணிக்கும் பணியில் பார்வையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மக்களவைத் தொகுதிகள் மட்டுமல்லாது, மாநில அளவிலும் பிரத்யேகமாக, செலவினப் பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கேரளத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஐ.ஆர்.எஸ்., அதிகாரி பி.ஆர். பாலகிருஷ்ணன், மாநில அளவிலான செலவினப் பார்வையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் தனது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டதுடன், என்னுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

உரிய அனுமதியின்றி ரொக்கப் பணத்தை எடுத்துச் செல்வதைக் கண்காணிக்கும் பணியில் மத்திய அரசை சேர்ந்த அமைப்புகளும் ஈடுபட்டுள்ளன. இந்த அமைப்புகளைச் சேர்ந்த அதிகாரிகளுடன், தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் மாநில செலவின பார்வையாளரும் பங்கேற்பார். காலை 11 மணி மற்றும் பிற்பகல் 3 மணி என 2 பிரிவாக இந்தக் கூட்டம் நடத்தப்படும்.



**இன்று தேர்தல் ஆணைய கூட்டம்:** இதனிடையே, அனைத்து மாநிலங்களிலும் தேர்தலுக்காக செய்யப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் ஆய்வு செய்யவுள்ளது. இதற்கான கூட்டத்தை காணொலி வழியாக இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் ஏற்பாடு செய்துள்ளார். அனைத்து மாநில தலைமைச் செயலர்கள், காவல் துறை இயக்குநர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் தொடர்புடைய அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்களுடன் வரும் 4-ஆம் தேதி காணொலி மூலம் ஆலோசிக்கவுள்ளேன். இதில் மக்களவைத் தேர்தல் மற்றும் விளவங்கோடு பேரவை இடைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்படும். இதிலும் மாநில செலவின பார்வையாளர் பங்கேற்பார்.

**பணியின் போது இறப்போருக்கு...** தேர்தல் பணியின்போது இறந்தால் அவர்களுக்கு நிவாரண உதவியாக ரூ.15 லட்சம், பெரிய அளவில் காயமடைந்தவர்களுக்கு ரூ. 7.50 லட்சம், லேசாக காயமடைந்தவர்களுக்கு ரூ. 40 ஆயிரம் வழங்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. போக்குவரத்து காவலர் ஒருவர் பணியின்போது இறந்தது தொடர்பாக அவருக்கு நிவாரணம் வழங்கக் கேட்டு, தேர்தல் துறைக்கு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது.

தீவிரவாத தாக்குதல்களில் இறப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு இறப்பு நிவாரணம் இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

CEO, TN appoints General expenditure observer to monitor of Candidates expenses.

தினமணி
2 - APR 2024

# வாக்கு ஒப்புகைச் சீட்டை எண்ணக் கோரி மனு

## மத்திய அரசு, தேர்தல் ஆணையம் பதிலளிக்க உச்சநீதிமன்றம் நோட்டீஸ்

புது தில்லி, ஏப். 1: வாக்கு ஒப்புகைச் சீட்டை (விவிபேட்) முழுமையாக எண்ணக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பரிசீலித்த உச்சநீதிமன்றம், இது தொடர்பாக மத்திய அரசும், தேர்தல் ஆணையமும் பதிலளிக்கக் கோரி நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

தேர்தலின்போது வாக்காளர்கள் தங்கள் வாக்கு சரியாக செலுத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வாக்கு ஒப்புகைச் சீட்டு (விவிபேட்) பயன்படுத்தப்படுகிறது. இப்போதைய நடைமுறைப்படி ஒவ்வொரு தொகுதியிலும் 5 வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் வாக்குகள் மட்டும் வாக்கு ஒப்புகைச் சீட்டு எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது.

இந்நிலையில் சமூக ஆர்வலர் அருண் குமார் என்பவர் சார்பில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் வாக்குகளை எண்ணுவதுபோல, வாக்கு ஒப்புகைச் சீட்டையும் முழுமையாக எண்ண வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரணைக்கு ஏற்ற உச்சநீதிமன்றம் இது தொடர்பாக மே 17-ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டது.

முன்னதாக, ஒரு தொகுதியில் ஒரு வாக்குப் பதிவு இயந்திரத்தில் பதிவாகும் வாக்குகள் மட்டும் வாக்கு ஒப்புகைச் சீட்டு எண்ணிக்கையுடம் ஒப்பிடப்படும் என்ற நடைமுறை இருந்தது. அப்போதும், இந்த எண்ணிக்கையை அதிகரிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை கடந்த 2019-ஆம் ஆண்டு விசாரித்த உச்சநீதிமன்றம், ஒவ்வொரு தொகுதியிலும் 5 வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் வாக்குகளை வாக்கு ஒப்புகைச் சீட்டு எண்ணிக்கையுடன் ஒப்பிட வேண்டும் என்று அதிகரித்து உத்தரவிட்டது. அந்த நடைமுறையே இப்போது அமலில் உள்ளது.

Supreme Court notice ECI for petition on Counting of vote

Acknowledgement.

தினமணி
2 - APR 2024

# திருத்தணியில் துணை ராணுவ வீரர்கள் வருகை

திருத்தணி, ஏப். 1: மக்களவைத் தேர்தல் பாதுகாப்புப் பணியையொட்டி திருத்தணிக்கு மத்திய துணை ராணுவ வீரர்கள் திங்கள்கிழமை வந்தனர்.

அரக்கோணம் தொகுதியில் திமுக வேட்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், அதிமுக வேட்பாளர் ஏ.எல். விஜயன், பாமக வேட்பாளர் பாலு உள்பட, 26 பேர் போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்கள் தனது கட்சி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகின்றனர். மேலும், வருவாய் துறையினர், 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என பொதுமக்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வாக்காளர்கள் அச்சமின்றி வாக்கு சாவடிகளுக்கு சென்று வாக்களிக்கலாம் என விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக மகாராஷ்டிர மாநிலம் புணேயில் இருந்து துணை ராணுவ வீரர்கள் 122 பேர் திருத்தணிக்கு திங்கள்கிழமை வருகை தந்தனர்.



திருத்தணிக்கு வந்த துணை ராணுவ வீரர்களை வரவேற்ற டிஎஸ்பி விக்னேஷ் தமிழ்மாறன்.

அவர்களை, திருத்தணி டி.எஸ்.பி., விக்னேஷ்தமிழ்மாறன், இன்ஸ்பெக்டர் மதியரசன், எஸ்.ஐ., ராக்கிகுமாரி ஆகியோர் வரவேற்று, அக்கைய்ய நாயுடு சாலையில் உள்ள காவல் துறை அடுக்குமாடி கட்டடத்தில் தங்க வைத்தனர்.

மேலும் துணை ராணுவ வீரர்களுக்கு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஓரிரு நாளில் துணை ராணுவ வீரர்கள், உள்ளூர் போலீஸாருடன் இணைந்து அணிவகுப்பு நடத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Arrival of paramilitary for elections 2024.

தினமலர்

2 - APR 2024

# காஞ்சிபுரம் தொகுதி ஓட்டுச்சாவடிகளில் ஓட்டுப்பதிவு அலுவலர்கள் பற்றாக்குறை

**மாமல்லபுரம், ஏப். 2–** காஞ்சிபுரம் – தனி லோக்சபா தொகுதியில், தேர்தல் ஊழியர்கள் பற்றாக் குறையால், ஓட்டுச்சாவடி களில் தலா ஒரு ஊழியர் தவிர்க்கப்பட்டுள்ளார்.

இத்தொகுதியில், காஞ் சிபுரம் மாவட்டத்தின் காஞ்சிபுரம், உத்திரமே ரூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தின் செங்கல் பட்டு, திருப்போரூர், மது ராந்தகம் – தனி, செய்யூர் – தனி ஆகிய சட்டசபை தொகுதிகள் உள்ளன.

லோக்சபா தேர்தல் ஓட் டுப்பதிவு, வரும் 19ம் தேதி நடக்கிறது. இதை யடுத்து, தேர்தல் ஆணை யம், அரசுப் பள்ளிகளில், ஓட்டுச்சாவடிகள் அமைப் பது, மின்னணு ஓட்டுப் பதிவு இயந்திரம் அளிப்பது, மண்டல அலுவலர்கள், ஓட்டுச்சாவடிகளில் பணி புரியும் பிற ஊழியர்க ளுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட ஏற்பாடுகளை தீவிரப்படுத்தி உள்ளது.

இந்நிலையில், செங் கல்பட்டு மாவட்டத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை யால், ஓட்டுச்சாவடி ஊழி யர்களில், ஒரு ஊழியர் தவிர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டுச்சாவடியில், ஓட்டுச்சாவடி தலைமை அலுவலர், ஓட்டுப்பதிவு அலுவலர்கள் 1, 2, 3 என, தலா நான்கு பேர் நியமிக் கப்படுவர். இத்தேர்தலில், ஓட்டுப்பதிவு மூன்றாம் அலுவலர் தவிர்க்கப் பட்டுள்ளார்.

வாக்காளர் அடையாள ஆவணத்தை சரிபார்த்து, அவரது வாக்காளர் எண், பாகம் எண் உள்ளிட்ட விபரங்களை படிவத் தில் பதிந்து, கைவிரலில் மையிட்டு, ஓட்டளிக்க, 1, 2 அலுவலர்கள் ஏற்பாடு செய்வர். மூன்றாம் அலு வலர், மின்னணு இயந்தி ரத்தை இயக்கி, ஓட்டளிக்க அனுமதிப்பார்.

இது குறித்து, தேர்தல் ஊழியர்கள் கூறியதாவது:

செங்கல்பட்டு மாவட் டத்தில் உள்ள தாம்பரம், பல்லாவரம், சோழிங் கநல்லூர் ஆகிய சட் டசபை தொகுதிகள், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் தென்சென்னை லோக்சபா தொகுதிகளில் உள்ளன.

ஆனாலும், செங்கல் பட்டு மாவட்டம் என்ப தால், அங்கும் மாவட்ட ஊழியர்களே பணிபுரிய வேண்டும்.

எனவே தான், காஞ்சிபு ரம் லோக்சபா தொகுதியில், ஊழியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், மூன்றாம் அலுவலர் தவிர்க் கப்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டே அலுவலர் கள், பணிகளை பகிர்ந்து செய்ய அறிவுறுத்தியுள்ள னர். எனவே, பணி விப ரம் நன்கு அறிந்தவர்களை நியமிக்க, அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Demand for polling person at Kanchipuram dist.

தினகரன்

2 - APR 2024

அனுமதியின்றி சாலையில் அமைக்கப்பட்ட

# அதிமுக மேடை, எல்இடி திரை அகற்றம்

● பறக்கும் படை நடவடிக்கை ● விதிமீறியதாக போலீசில் புகார் ● கட்சியினர் வாக்குவாதம்

திருவொற்றியூர், ஏப்.2: வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் ராயபுரம் மனோ போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக திருவொற்றியூரில் முன்னாள் எம்எல்ஏ கே.குப்பன், 7வது வார்டு அதிமுக கவுன்சிலர் கே.கார்த்திக் ஆகியோர் கட்சி தொண்டர்களுடன் திருவொற்றியூர் தொகுதியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று 7வது வார்டுக்கு உட்பட்ட கிளாஸ் சாலையில் அதிமுக சார்பில் தெருமுனை கூட்டம் நடத்த கே.குப்பன் ஏற்பாடு செய்திருந்தார். சாதாரண தெருமுனை கூட்டம் என்ற பெயரில் அனுமதி பெற்று இருந்த இவர், சாலையோரத்தில் பிரமாண்ட மேடை, அதிமுக சாதனை விளக்கும் குறும்படம் ஒளிபரப்பக்கூடிய எல்இடி திரை, டிஜிட்டல் பேனர், ஒலிப்பெருக்கி மற்றும் 1,000க்கும் மேற்பட்ட நாற்காலிகளை ஏற்பாடு செய்து இருந்தார்.

பொதுமக்கள் பயன்படுத்தும் முக்கிய சாலையில் தெருமுனை கூட்டம் என்ற பெயரில் பொதுக்கூட்டம் போல் கூட்டத்தைக் கூட்டி கட்சியினரை அமர வைத்திருந்ததால் அந்தப் பகுதியில் முற்றிலுமாக போக்குவரத்து தடைப்பட்டது.

இது குறித்து பறக்கும் படை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், பறக்கும் படை அதிகாரி சம்பத் தலைமையிலான தேர்தல் அதிகாரிகள் அந்த இடத்திற்கு வந்தனர். பின்னர் மேடை அமைப்பதற்கு அனுமதி இல்லை என்றும், எனவே அந்த மேடையை அப்புறப்படுத்த வேண்டும், என கூறினர். ஒரே நேரத்தில் ஆயிரம் பேர் கூடுவதற்கு அனுமதி இல்லை எனவும் தெரிவித்தனர். இதனால் அதிகாரிகளுக்கும், அங்கிருந்த கட்சி தொண்டர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். பின்னர் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடை, எல்இடி ஆகியவை அப்புறப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. ஆனாலும் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக பறக்கும் படை அதிகாரிகள் சாத்தான்காடு காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தில் முன்னாள் எம்எல்ஏ கே.குப்பனுக்கு எதிரணியாக செயல்படும் சில அதிமுகவினரே கூட்டம் நடத்த விடாமல் உள்குத்து வேலை செய்ததாக கூறப்படுகிறது.

News regarding Removal of ADMK's Stage tent & led screen

தினகரன்

2 - APR 2024

ஆவணமின்றி எடுத்துச்சென்றதாக

# தமிழகத்தில் இதுவரை ₹110 கோடி பறிமுதல்

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, ஏப். 2: தமிழகத்தில் தேர்தல் அறிவித்த பிறகு சரியான ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் சென்றதாக இதுவரை ரூ.110 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறும் என்று இந்திய தலைமை தேர்தல் ஆணையம் கடந்த 16ம் தேதி அறிவித்தது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட அன்றைய தினத்தில் இருந்தே தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. அதன்படி பொது மக்கள் ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் ரொக்கப் பணம் எடுத்துச் செல்ல கூடாது என்று அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து தமிழகத்தில் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். அதன்படி, கடந்த 16ம் தேதி மாலையில் இருந்து 31ம் தேதி (நேற்று முன்தினம்) வரை தமிழகத்தில் சரியான ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் சென்றதாக சுமார் ரூ.110 கோடி பணம் மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறினார்.

அதன்படி ரொக்கத் தொகை ரூ.48.61 கோடி, மதுபானம் ரூ.3.06 கோடி, தங்கம், வெள்ளி நகைகள் ரூ.47.53 கோடி, போதை பொருட்கள் ரூ.67 லட்சம் மற்றும் வருமான வரித் துறையினர் சுமார் ரூ.10 கோடி என மொத்தம் ரூ.109.76 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

CEO informs that " as of now 110 crore were seized at Tamil Nadu.

தினகரன்

2 - APR 2024

## இளம் வாக்காளர்களே ஓட்டு போடுங்க...



# 118 வயது 'மிட்டாய் தாத்தா' பிரசாரம்

தஞ்சாவூர் கீழவாசல் ஆடக்காரத்தெருவில் வசித்து வருபவர் முகமது அபுசலி (118). 'மிட்டாய் தாத்தா' என்று அழைக்கப்படும் இவர், வீட்டையொட்டி மிட்டாய் கடை வைத்து நடத்தி வருகிறார். அன்றாட பணிகளை யாருடைய உதவியுமின்றி தானே செய்து வருகிறார். இதுவரை நடந்த அனைத்து தேர்தல்களிலும் வாக்களித்துள்ளார். இந்நிலையில் வரும் 19ம் தேதி நடைபெறவுள்ள 18வது மக்களவை தேர்தலில் முதல்முறையாக வாக்களிக்க உள்ள இளம் வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய விளையாட்டு மைதானத்தில் இருந்து விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த பிரசாரத்தை தொடங்கி வைத்த மிட்டாய் தாத்தா முகமது அபுசலி, 'மதிப்புமிக்க வாக்குகளை பணத்துக்காக விற்காமல் மனசாட்சிப்படி வாக்களிக்க வேண்டும். வாக்களிக்க தகுதிபெற்ற அனைவரும் குறிப்பாக 18 வயது நிறைவடைந்து முதல் முறையாக வாக்களிக்க உள்ள இளம் வாக்காளர்கள் இந்த நாடாளுமன்ற தேர்தலில் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும். ஒவ்வொரு வாக்கும் ஜனநாயகத்தில் நமது உரிமையை நிலைநாட்டும்' என்று கூறி பொது மக்களிடம் இனிப்புகளை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

Awareness programme by 118 Aged person.

தினமணி

2 - APR 2024

# ஆவணம் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.1.23 லட்சம் பறிமுதல்

சென்னை, ஏப். 1: சென்னை ராயபுரத்தில் ஆவணம் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.1.23 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

ராயபுரம் மன்னார் சாமி கோயில் தெரு பேருந்து நிறுத்தம் அருகே பறக்கும் படையினர் திங்கள்கிழமை வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு ஒரு ஜீப்பில் வந்த செங்கல்பட்டு அருகே உள்ள நத்தம் கே.கே. தெருவைச் சேர்ந்த பீ.குமார் (58) என்பவரை வழிமறித்து சோதனையிட்டனர்.

இச்சோதனையில் அவர் வைத்திருந்த ரூ.1,23,000-க்குரிய ஆவணங்களை கேட்டனர். ஆனால் அவரிடம் பணத்துக்குரிய எந்த ஆவணமும் இல்லாததால், ரொக்கத்தை பறிமுதல் செய்தனர். விசாரணைக்கு பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை, அரசு கருவூலத்தில் ஒப்படைத்தனர். இது தொடர்பாக விசாரணையும் நடைபெறுகிறது. முதல் கட்ட விசாரணையில் மீன் வியாபாரியான குமார், காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் மீன் வாங்குவதற்கு வந்திருப்பது தெரியவந்துள்ளது.

1.23 lakhs were seized by flying squad.

Squad

தினகரன்

21 - APR 2024

# 100 சதவித வாக்குப்பதிவு வலியுறுத்தி பேரணி






► நாடாளுமன்ற தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, உலக மனித உரிமை ஆணையம் மற்றும் மீட்பு மையம் சார்பில் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை சாலையில் நேற்று விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. அடுத்த படம்: திருவான்மியூர் பேருந்து நிலையத்தில் மாநகராட்சி சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பேனர் வைக்கப்பட்டுள்ளது.

Awareness ~~[illegible]~~ rally by Sveep nodal officer.

தினகரன்
2 - APR 2024

## மின்னணு எந்திரம், விவிபேட் விவகாரம்

# தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

புதுடெல்லி,ஏப்.2: தேர்தலில் தற்போதைய நடைமுறையின்படி ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதியிலும் தோராயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் தொடர்பாக மட்டுமே விவிபேட் எந்திரத்தில் பதிவான வாக்குகளுடன் ஒப்பிட்டு பார்த்து எண்ணப்படுகிறது. ஆனால் விவிபேட் பொறுத்தப்பட்ட அனைத்து மின்னணு எந்திரங்களையும் சரிபார்க்க கோரிக்கை விடுத்து வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமான அருண் குமார் அகர்வால் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

மின்னணு எந்திரங்களுடன் இணைக்கப்பட்ட விவிபேட் வாக்குகளையும் சரிபார்க்க உத்தரவிட வேண்டும். விவிபேட் வாக்குகளை சரிபார்த்தால் வாக்கு எண்ணிக்கையில் தேவையில்லா தாமதம் ஏற்படும் என்ற தேர்தல் ஆணையத்தின் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதியிலும் ஒரே நேரத்தில் சரிபார்ப்பு பணிகளை எளிதாக மேற்கொள்ள முடியும். இதற்காக கூடுதல் அதிகாரிகளை நியமித்தால், 5 முதல் 6 மணி நேரத்திற்குள் முழுமையான விவிபேட் வாக்குகளையும் சரி பார்க்க முடியும்.



கிட்டத்தட்ட 24 லட்சம் விவிபேட் எந்திரங்களை வாங்குவதற்கு ஒன்றிய அரசு கிட்டத்தட்ட ₹5,000 கோடி செலவழித்தாலும், சுமார் 20,000 விவிபேட்களின் சீட்டுகள் மட்டுமே சரிபார்க்கப்படுகின்றன. கடந்த காலங்களில் மின்னணு எந்திரம் மற்றும் விவிபேட் வாக்கு எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முரண்பாடுகள் குறித்து நிபுணர்கள் பல்வேறு கேள்விகள் எழுப்பியுள்ளனர். அவை அனைத்தும் தேர்தல் ஆணையத்தால் விளக்கம் அளிக்க முடியவில்லை. எனவே அனைத்து விவிபேட் எந்திரத்தில் உள்ள ஸ்லிப்புகளையும், மின்னணு எந்திர வாக்குகளையும் சரியாக இருக்கிறதா என்பது பற்றி உன்னிப்பாகக் கணக்கிடுவது அவசியம்.

மேலும் வாக்காளர்கள் தங்கள் விவிபேட் சீட்டுகளை ஒரு வாக்குப் பெட்டியில் தனியாக போடுவதற்கு அனுமதிப்பதன் மூலம், மின்னணு எந்திரத்தில் உள்ள தங்களின் வாக்குகளை முழுமையாகச் சரிபார்க்கும் வாய்ப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனு குறித்து பதில் அளிக்க தேர்தல் ஆணையத்திற்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதிகள், இந்த மனுவை மின்னணு எந்திரம் மற்றும் விவிபேட் வழக்கு தொடர்பாக நிலுவையில் உள்ள மற்ற வழக்குகளுடன் இணைக்கும்படி உத்தரவிட்டனர்.

- 2019 மக்களவை தேர்தலுக்கு முன், அனைத்து மின்னணு எந்திரங்களிலும், குறைந்தது 50 சதவீத விவிபேட் வாக்குகளை சரிபார்க்கக் கோரி சுமார் 21 எதிர்க்கட்சி தலைவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.
- அனைத்து மின்னணு எந்திரங்களுடன் இணைக்கப்பட்ட விவிபேட் வாக்குகளை சரிபார்க்கக்கோரி தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் பதிவான வாக்குகளுடன் விவிபிஏடி சீட்டுகளை கணக்கிட வேண்டும் என்ற மனு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

News regarding Supreme Court on EVM & VVpat.

தினகரன்

2 - APR 2024

## 39 தொகுதிகளையும் கண்காணிக்க

# மாநில செலவின பார்வையாளராக ஓய்வு ஐஆர்எஸ் அதிகாரி நியமனம்

### அமலாக்கத்துறை, வருமானவரி துறையினருடன் இன்று ஆலோசனை

சென்னை, ஏப்.2: சென்னை தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு நேற்று அளித்த பேட்டி:

அறந்தாங்கியில் முன்னாள் முதல்வர் ஓபன்னீர்செல்வம், ஆரத்தி எடுத்த பெண்ணுக்கு பணம் கொடுத்ததாக வந்த புகார் குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. பிற கட்சி தலைவர்களை தரம் தாழ்த்தி பேசுவதை நட்சத்திர பேச்சாளர்கள் தவிர்க்க வேண்டும். இதுபோன்ற நிகழ்வுகளில் சி-விஜில் செயலி மூலம் பெறப்படும் வீடியோ ஆதாரங்கள் மிக முக்கியமானதாகவும், நடவடிக்கை எடுப்பதற்கு உகந்ததாகவும் கருதப்படுகிறது.

செல்போன் மூலம் எடுக்கப்படும் வீடியோக்களில் வெளியாகும் படங்களை, அவை முந்தைய தேர்தல் சம்பந்தப்பட்டது என்று மறுக்கின்றனர். எனவே தேர்தல் நடத்தை விதி மீறலை படம் எடுப்பவர்கள், இனி சி-விஜில் செயலி (ஆப்) மூலம் எடுத்து அதை பதிவேற்றம் செய்யுங்கள். புகார் அனுப்புகிறவர்களின் பெயர், விவரம் வெளிவராது.

இந்த செயலியை பயன்படுத்தி இதுவரை 1,822 புகார்கள் வந்தன. அதில் 1,803 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மொத்தமுள்ள 6.23 கோடி வாக்காளர்களுக்கும் பூத் ஸ்லிப் வழங்கும் பணி நேற்று தொடங்கியது. வருகிற 13ம் தேதிக்குள் அனைவருக்கும் வழங்கப்பட்டு விடும். வாக்காளர் வழிகாட்டி கையேடு விநியோகமும் நடந்து வருகிறது. அதன் மூலம் வாக்குச்சாவடி இருப்பிடத்தை அறிந்துகொள்ளலாம்.

தேர்தல் பணியின் போது இறந்தால் நிவாரண உதவியாக ₹15 லட்சம், பெரிய அளவில் காயமடைந்தவர்களுக்கு ₹7.50 லட்சம், லேசான காயமடைந்தவர்களுக்கு ₹40 ஆயிரம் வழங்கப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. போக்குவரத்து காவலர் ஒருவர் பணியின்போது இறந்தது தொடர்பாக அவருக்கு நிவாரணம் கேட்டு, தலைமை தேர்தல் அதிகாரிக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது. தீவிரவாத தாக்குதல்களில் இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் இருமடங்காக வழங்கப்படும்.

அரசியல் தலைவர்களை வரவேற்று, நாளிதழ்களில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அளிக்கும் விளம்பரங்களுக்கு தேர்தல் கமிஷன் ஒப்புதல் தேவை. ஆனால் தலைவர்களை வரவேற்று தனி நபர்கள், நாளிதழ்களில் தரும் விளம்பரங்களுக்கு தேர்தல் கமிஷன் ஒப்புதல் தேவையில்லை.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளையும் கண்காணிக்க பிரத்யேகமாக மாநில செலவின பார்வையாளராக கேரளாவில் ஓய்வு பெற்ற ஐஆர்எஸ் அதிகாரி பி.ஆர்.பாலகிருஷ்ணனை, இந்திய தேர்தல் கமிஷன் நியமித்துள்ளது. அவர் சென்னை வந்து என்னை நேற்று சந்தித்தார். ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள 58 செலவின பார்வையாளர்களின் செயல்பாடுகள் உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்து அவர் என்னுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இன்று தலைமை செயலகத்தில் அமலாக்கத்துறை, ஜிஎஸ்டி, சுங்கம் மற்றும் கலால்வரி துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட அமலாக்க முகமைகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் மாநில செலவின பார்வையாளரும் பங்கேற்பார். காலை 11 மணி மற்றும் பிற்பகல் 3 மணி என 2 பிரிவாக இந்த கூட்டம் நடத்தப்படும்.

இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைத்து இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் நாளை வீடியோ கான்பரன்சிங் மூலம் கூட்டம் நடத்துகிறார். அனைத்து மாநில தலைமை செயலாளர்கள், டிஜிபிக்கள், தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்பார்கள்.

4ம் தேதி மாலை 5 மணிக்கு அனைத்து மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகளுடன், எனது தலைமையில் வீடியோ கான்பரன்சிங் மூலம் தேர்தல் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட உள்ளது. இதிலும் மாநில செலவின பார்வையாளர் பங்கேற்பார்.

News regarding Expenditure observer

தினகரன்

12 - APR 2024

தமிழகத்தில் 39 தொகுதிகளில் போட்டியிடும்

# 950 வேட்பாளர்களில் 609 பேர் சுயேச்சைகள்

சென்னை, ஏப். 2: தமிழகத்தில் திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜ உள்ளிட்ட அரசியல் கட்சிகளை தவிர்த்து 609 பேர் சுயேச்சை வேட்பாளர்களாக களத்தில் நிற்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் வருகிற 19ம் தேதி 39 நாடாளுமன்ற தொகுதிக்கு வாக்குப்பதிவு நடக்கிறது. இதற்கான வேட்புமனுக்கள் பரிசீலனை, வாபஸ் முடிந்து இறுதி வேட்பாளர்கள் பட்டியல் கடந்த 30ம் தேதி வெளியிடப்பட்டது. அரசியல் கட்சி வேட்பாளர்கள் அவர்களின் கட்சி சின்னங்களில் போட்டியிடுகிறார்கள். சுயேச்சைகளுக்கு தேர்தல் ஆணையம் தனித்தனி சின்னங்கள் ஒதுக்கி உள்ளது. தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் மொத்தம் 950 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதில் அதிகளவில் சுயேச்சை வேட்பாளர்களே போட்டியிடுகிறார்கள்.

இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று வெளியிட்டுள்ள தகவல்:

தமிழகத்தில் திமுக 22 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதிமுக 34 தொகுதிகளில் போட்டியிடுகிறது. பாஜ 23 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதி, பாமக 10, நாம் தமிழர் கட்சி 39, பகுஜன் சமாஜ் பார்ட்டி 39, தேமுதிக 5, மார்க்சிய கம்யூனிஸ்ட் 2, இந்திய கம்யூனிஸ்ட் 2, விடுதலை சிறுத்தைகள் கட்சி 2, மதிமுக 1, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 1, தமாகா 3, அமமுக 2, நாடாளும் மக்கள் கட்சி 12 மற்றும் சுயேச்சைகள் 609 பேர் என மொத்தம் 950 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

950 Candidates, of 609 independent Candidate for Election 2024.

தினகரன்

21-APR 2024

தமிழகத்தில் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக

# 165 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் கூடுதலாக வருகை

சென்னை, ஏப். 2: தமிழகத்தில் மொத்தமுள்ள 39 நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்குப்பதிவு வருகிற 19ம் தேதி ஒரே கட்டமாக நடக்கிறது. பாதுகாப்பு பணிக்காக தமிழகத்தில் தேர்தல் பணிக்கான 190 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் அனுப்பி வைக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தது.

அதன்படி, பாதுகாப்பு பணிக்காக இதுவரை 25 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் தமிழகம் வந்துள்ளனர். இந்நிலையில் மேலும் 165 துணை ராணுவ வீரர்கள் நேற்று (ஏப்ரல் 1) முதல் படிப்படியாக தமிழகம் வர தொடங்கியுள்ளனர். இந்த 165 கம்பெனி துணை ராணுவ வீரர்களும் தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிக்கும் பிரித்து அனுப்பி வைக்கப்படுவார்கள்.

எந்தெந்த பகுதிகளுக்கு எவ்வளவு துணை ராணுவ வீரர்கள் அனுப்பி வைக்க வேண்டும் என்பது குறித்து தேர்தல் ஆணையம் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள போலீஸ் உயர் அதிகாரிகள் முடிவு செய்வார்கள்.

Arrival of 165 paramilitary force at Tamilnadu.

தினகரன்

2 - APR 2024.

# கனிமொழி எம்பி காரில் பறக்கும்படை சோதனை



தூத்துக்குடி, ஏப். 2: தூத்துக்குடியில் கனிமொழியின் காரில் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

தூத்துக்குடி மக்களவை தொகுதி வேட்பாளரும், திமுக துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி எம்பி, நேற்று மாலை தூத்துக்குடியில் இருந்து நெல்லை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்காக காரில் புறப்பட்டு சென்றார். அப்போது தூத்துக்குடி 3வது மைல் அருகே புள்ளியியல் துறை உதவி இயக்குநர் ஸ்மிருதி ரஞ்சன் பிரதான் தலைமையிலான பறக்கும் படை அதிகாரிகள் கனிமொழி வாகனத்தை நிறுத்தி காரில் சோதனை செய்தனர். இந்த சோதனையை முழுமையாக வீடியோ பதிவு செய்தனர். கனிமொழி எம்பி, பறக்கும் படையினரின் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளித்தார். வாகனத்தில் எதுவும் இல்லாததால் அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். அதனைத் தொடர்ந்து கனிமொழி நெல்லைக்கு புறப்பட்டுச் சென்றார்.

CMYK


Dep Survaillance at M.P kanimozhi's car

தினகரன்

2 - APR 2024

# அதிமுக நோட்டீசுடன் பணம் பட்டுவாடா

## முதியவர் சிக்கினார்




திருப்புத்தூர், ஏப்.2: திருப்புத்தூர் அருகே வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்தபோது முதியவரை தேர்தல் பறக்கும் படையினர் கையும் களவுமாக பிடித்தனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூர் அருகே செவ்வூர் கிராமத்தை சேர்ந்தவர் செல்வம்(62). இவர், கிராமத்தில் உள்ள டீக்கடையில் வைத்து தேர்தலில் வாக்களிப்பதற்காக வார்க்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்து வருவதாக தேர்தல் பறக்கும் படை அதிகாரி கிருஷ்ணக்குமாருக்கு நேற்று தகவல் வந்துள்ளது.

இதையடுத்து அங்கு சென்ற பறக்கும் படை அதிகாரிகள் பணப்பட்டுவாடாவில் ஈடுபட்டிருந்த செல்வத்தை கையும் களவுமாக பிடித்தனர். அவரிடமிருந்து ₹56 ஆயிரத்து 950ஐ கைப்பற்றினர். இதையடுத்து, அருகிலுள்ள பூலாங்குறிச்சி காவல் நிலையத்தில் பணப்பட்டுவாடா குறித்து புகார் அளித்தனர். மேலும், செல்வத்தின் கையில் அதிமுக தலைவர்கள் படம் அச்சடிக்கப்பட்ட அதிமுக வேட்பாளரின் பிரசார நோட்டீஸ் கையில் வைத்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து கைப்பற்றப்பட்ட பணத்தை திருப்புத்தூர் கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

Along with the pamphlet money were distributed.

தினகரன்

2 - APR 2024

# நடன நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு



▶ நாடாளுமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, ஓஎம்ஆர் சாலை நாவலூரில் உள்ள ஒரு மாலில் கல்லூரி மாணவர்கள் நடன நிகழ்ச்சி மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

Awareness programme for 100% voting.